ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

செப்டம்பர் – அக்டோபர் 2020

இதழ் 02



## பாரதியும் இஸ்லாமும்

-மாலன்



# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
செப்டம்பர் - அக்டோபர் 2020
இதழ் 02


**ஆசிரியர் : சித்தி வஃபீரா**
editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**
Hon. editor : Tamilnenjam Amine


தமிழ்நெஞ்சங்களே வணக்கம்.

அன்பான வாசகர்கள் தமிழ்நெஞ்சம் இனையத்திலிருந்து தரவிறக்கம் செய்து படிக்கலாம்.

ஏழுத்தாளர்கள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள் தங்களின் ஆக்கங்களை மின்னஞ்சல் வழி அனுப்பித் தாருங்கள்.

இதழ் ஒவ்வொரு மாதமும் முதலாம் வாரத்தில் வெளியிடப்படுகிறது.

இதழைப்படிப்பதுடன் நில்லாமல் இதழ் பற்றியக் கருத்துகளையும் பதியும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

https://tamilnenjam.com

மின்னஞ்சல் / e-mail
editor@tamilnenjam.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.


படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

e-mail :
muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

# ஆசிரியர் பக்கம்

அன்புக்குரிய வாசகர்களே

வணக்கம்!

எனது நீண்டகால இதழியல் கனவு மெய்ப்படும் என்று நினைத்திராத காலத்தில் திடீரென ஏற்பட்ட ஒருவரது எண்ண உயர்வினால் சாத்தியமானது கண்டு திகைத்துப்போனேன். அவரது பொதுப்பணி சிறந்து வாழ்வில் உயர வேண்டுமாய் வாழ்த்துகிறேன்

முதல் இதழே பலநூறு வாசகர்களைச் சென்றடைந்து நேசிப்பதை வாசகர்கள் தொடர்புகொண்டு பேசியபோது மனநிறைவால் நெகிழ்ந்தேன். அனைவருக்கும் நன்றியும் பேரன்பும்.

இதழை எப்படியோ நற்றுணையுடன் துணிந்து தொடங்கி விட்டேனென்றாலும், இத்துறையில் உண்டான சிக்கல்களையும் சிரமங்களையும் உணர்ந்திட முடிகிறது. எல்லோரும் விரும்பும் நல்ல ஆக்கங்களை வாசகர்களுக்குத்தர வேண்டுமெனும் முனைப்பில் முழு மூச்சுடன் செயல்பட்டுவருகிறேன். வாசகர்களும், எழுத்தாளர்களும், இத்துறையில் வலம்வரும் நட்பானவர்களும் தங்களின் ஆலோசனைகளை வழங்கி இதழை சிறப்பாக்கிட வேண்டுமாய் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

எழுத்தாள தோழமைகள் ஒவ்வொரு இதழும் வெளிவரும் கடைசி நேரம்வரை காத்திராமல் முன்கூட்டியே அனுப்பி உதவியாக செயல்பட விழைகிறேன்.

நான் தனியாளாய் எதுவும் செய்திட இயலாது. எனது முயற்சியில் கைகோர்க்க விரும்பும் நட்புகள் தங்களின் எண்ணங்களை மின்னஞ்சல் வழி எழுதி விவரிக்கும்படி பணிவாய்க் கோருகிறேன்.

வாழ்க வளத்துடன்!

– சித்தி வ.ஃபிரா

# கறை படிந்த கண்ணாடி



கண் முன்னாடி நின்ற கண்ணாடி
கதை சொல்லியது கவலை தந்தது..!

நிறை மனது கொண்ட
என் அகத்தின் அழகில்
கறை படிந்த கதையைச் சொன்னது..!!

நிறை தளும்பிய வாழ்வின்
குறைகளை குறித்துச் சொன்னது..
அந்தக் கண்ணாடி..!

வெளிப்பகட்டாய் வில்லங்கம் பேசும்
வாய்ச்சொல் வீரர்களின் உள்ளத்தின்
உணர்வை ஊரறிய காட்டும் கறை படிந்த கண்ணாடி..!!

குற்றமுற்ற மனதை குறித்துக் காட்டும்..!
ஊனமுற்ற மனதை உலகறியக் காட்டும்..!!

நீதி, நியாயம் நிலை நாட்டும்
அதிகார வர்க்கத்தின் சுயநலத்திற்காய்
விலை போகும் மனித விலங்குகளின்
முகம் காட்டும்..!!

அடுத்தவர் குறை பேசும் விபச்சார ஊடகங்களின்
ஊனத்தை உரிமையாய்க் காட்டும்..!!

இறையுணர்வு இல்லாத மனித உள்ளத்தை
பிரதியாக்கும் கறைபடிந்த கண்ணாடி..!!

**- எம்.பஹ்றத் ஜுனைட்**
காத்தான்குடி



# வாழ்தல் இனிது

## நிஷா ரஹ்மான்

தன்னம்பிக்கை என்பது நமக்கு எத்தகைய உந்து சக்தியாக இருக்கிறது என்பதை தன்னம்பிக்கை மிகுந்த ஒருவரால் மட்டுமே நன்கு உணர முடியும்.

தன்னம்பிக்கை இருக்கும் இடத்தில் தாழ்வு மனப்பான்மை என்ற சொல்லுக்கே இடமில்லாது போய் விடும்.

தன்னம்பிக்கை மிகுந்த ஒருவரால் மட்டுமே வாழ்க்கையில் எத்தகைய சவால்களையும் சமாளித்து வெற்றி பெற முடியும்.

தன்னம்பிக்கை நமக்குள்ளே மாபெரும் உந்து சக்தியாக செயல்பட்டு, நம் செயல் திறன்களை வளர்த்துக் கொள்ள பெரும் துணையாக அமைந்து விடுகிறது.

தன்னம்பிக்கை இருக்கும் இடத்தில் தோல்வி என்ற நிலை ஏற்பட வாய்ப்பின்றி போய் விடுகிறது.

கிடைத்த வாய்ப்புகளை சரி வர பயன்படுத்திக் கொண்டவர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள்.

பெட்டிக் கடை வைத்தவர்கள் வணிக வளாகம் வைக்கும் அளவுக்கு உயர்வதற்கு காரணம், கிடைத்த வாய்ப்பை ஈடுபாட்டுடன் செய்வதால் மட்டுமே. புதுப்பித்துக் கொள்பவர்கள், நவீனமாகச் சிந்திப்பவர்களால் மட்டுமே போட்டிகள் நிறைந்த இந்த உலகில் சாதிக்க முடியும்.

மாற்றங்களே நம் வாழ்வின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். புதிய சூழலாக இருந்தாலும் அதைச் சவாலுடன் எதிர்கொள்ளத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

உலகத்துக்கேற்ப நம்மை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். தன்னை மாற்றிக்கொள்ளத் தயாராக இருப்பவர்கள் மட்டுமே உலகை மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவர்கள்.

நீண்ட தூர பயணத்துக்கு முன் பதிவு செய்வதுபோல, நல்லதே நடக்கும் என்ற எண்ணத்தை முன் பதிவு செய்துகொள்ள வேண்டும். எண்ணங்களே நம் நடத்தையைத் தீர்மானிக்கின்றன.

தினந்தோறும் மனதில் ''என்னால் முடியும்'' என்ற மந்திரச் சொல்லைச் சொல்லிக் கொண்டே இருங்கள். நம்பிக்கை ஒரு நாளும் பொய்க்காது.



தன்னம்பிக்கை மிகுந்த மனிதராக உங்களை நீங்கள் வெளிப்படுத்திக் கொள்ளுங்கள். உலகிலேயே உங்களுக்கு மிகவும் பிடித்த நபர் யார் என்று கேள்வி எழுப்பப்பட்டபோது, பெற்றோர், நண்பர்கள், ஆசிரியர்கள் பெயரைப் பதிலாக பலரும் கூறினர். ஒரே ஒருவர் மட்டும் நானே எனக்குப் பிடித்த மனிதர் என்று சொன்னாராம்.

முதலில் நம்மை நமக்கு பிடிக்க வேண்டும். நம்மை நாமே அங்கீகரிக்கும் போது, மற்றவர்களையும் மதிக்க கற்றுக் கொள்வோம்.

நம்மை பின் தள்ளும் பலவீனமான வார்த்தைகளில் இருந்து தள்ளிச் சென்று விடுங்கள். உலகம் உருண்டை என்று சொன்ன கலிலியோவையே நிராகரித்த உலகம் இது.

சாதனையாளர்களின் பின்னாலான வாழ்க்கை பெரும் பாலும் நிராகரிப்புகளால் ஆனதுதான். தளராத மனமும், விடாமுயற்சியும் இருப்பவர்களை தோல்வி ஒருபோதும் நெருங்குவதில்லை.

ஆழ்மனதில் தோன்றும் எண்ணங்களே நம்மை வழி நடத்துகின்றன. நம்மால் முடியும் என்ற ஆழ் மனதின் எண்ணங்களே அதிர்வலையை உண்டாக்குகின்றன. கடின உழைப்பு அதனை உண்மை யாக்குகிறது.

நம் வாழ்க்கையில் மட்டுமே இத்தனை சிக்கல்கள் என்று நினைப்பவர்கள் சாலையோரம் நடந்து சென்று பாருங்கள். விளிம்புநிலை மனிதர்களின் வாழ்க்கையைப் பார்க்கும் போது, அவர்கள் படும் வேதனைகள் புரியும்.

வலிகள் இல்லாத மனிதர்களே இல்லை. ஆனால், வலிகள் மட்டுமே வாழ்க்கை இல்லை.

வலிகளின் தன்மை மட்டுமே சிறியது, பெரியது என மனிதருக்கு, மனிதர் மாறுபடும். வலிகள் என்பது முன்னேற்றத்துக்கான வழிகள்.

உயர்ந்த நிலையை அடைய சிக்கல்களைத் தீர்க்கும் மனநிலை தேவை. அசைக்க இயலாத நம்பிக்கை நம்மை ஆளுமையாக்கும்.

தன்னம்பிக்கை உள்ளவரும், தன் மீது நம்பிக்கை உள்ள எவரும் தோற்றதே இல்லை. அடுத்தவர் என்ன செய்கிறார் என்று யோசிப்பதைவிட, அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிப்பவரே நம்பிக்கைவாதி.

மிகப் பெரிய மகிழ்ச்சிகள் நம்மிடமே உள்ளன. நம்பிக்கை, முயற்சி, உழைப்பு போன்றவற்றால் அமையும் வாழ்க்கை ருசிக்கும். பிறரது வாழ்க்கைக்கு துன்பம் தராத செயல்கள் மேலும் சிறப்பாகும். செய்து முடிக்கப்படும் வரை எதுவும் தெரிவதில்லை. ஆனால், நிறைவுற்ற பிறகு அதன் பிரம்மாண்டம் நம்மை அடுத்தகட்ட நகர்வுக்கு இழுத்துச் செல்லும். அதற்குத் தேவை நம்பிக்கையே.

நம்பிக்கையில் தடங்கல்கள் வந்தால் தடுமாறக் கூடாது. சின்ன சின்ன வெற்றிகளாக அடைந்து வரும்போது, பெரிய வெற்றிகள் எளிதாகும். இந்த உலகத்தில் முடியாது என்று எதுவுமே இல்லை. சரியான திட்டமிடலில் இருக்கிறது வெற்றியின் ரகசியம். நம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர் கொள்வோம்.

இனிது இனிது.. வாழ்தல் இனிது.

நற்சிந்தனைகள் இனியும் தொடரும்.

# நினைவலைகள்

மாரிக்கால மழையின் சாரல்
எனை மெல்லத் தென்றலாய்
வருடிச் செல்ல

நீ வந்து தழுவிச் செல்லும்
அழகில் மெல்லக் கரைகிறேன்
நான் ஓயாத அலைகளாய்

என் இதயம் வருடிச்செல்லும்
உன் நினைவலைகள்
துயில் கொள்ள
விழிகள் துடித்தாலும்

உன் குறும்பில் சின்னச்
சின்ன சீண்டலில்
என் கனாக்களின் வசந்தகால
பூக்களை உதிர்க்க

உனை அறிந்த பின் தான்
என் கவிதைகளும் தேவதைகளாய்
உலாப் போகின்றனவே

என் நாட்கள் புதிதாய்
மலர்வதும் உன்னாலன்றோ
உன் ஞாபகங்களும் மலர் கொய்ய

எனை வசப்படுத்திய மாயவனே
உன் நினைவுப் பூக்களுடன்
தினம் தினம் புதிதாய்
பறக்கின்றேன்
ஒரு பட்டாம்பூச்சியாய்

உனை நினைக்கையில்
எனை மறக்கும்
என் நினைவலைகள்
கரைந்து கரைந்து அழகாகின்றன
மழை முத்துக்களென.

**- றிஸ்லா - கண்டி**





# யாழ் மீட்டும் கண்ணு

யாழ் மீட்டும் கண்ணு - இளசு
யாவுமே தொலையுது இது புதுசு
யாரென கேட்குது மனசு
தேரென ஆடுது வயசு

தேடித் திரிந்திடும் உலகில்
பாடி பறந்திடும் கனவில்
ஆடித் திரிந்திடும் நினைவில்
சாடி இணைந்திடும் உறவில்!

மீதம் மிச்சமுமின்றி - இனி
தேகம் இனித்திட கொஞ்சி
கூடிக் கிடைத்திட்ட இன்பம்
பாட்டில் பளிச்சிட வந்தாள்

தேகம் தீண்டிய உணர்வும்
நேசம் பொங்கிடத் தந்தாள்
மானின் விழிகொண்ட பெண்ணாள்
நாணித் தலைநிமிர்ந்து நின்றாள்!

பொழுதில் தேடித் தேடியே
நினைவில் நிறுத்தி இந்நாள்
என்னை அணைத்தாள் முன்னால்
முற்றும் தொலைந்தேன் உன்னால்

தமிழ்நெஞ்சம் அமின்

# வானும் மண்ணும் நம் வசமே...

நூல் மதிப்புரை : **வஃபீரா வஃபி**

கவிதாயினி நஸீரா ஆப்தீன் எழுதி, வெளிவந்திருக்கும் நூல், தன்முனைக் கவிதைகளின் தொகுப்பான 'வானும் மண்ணும் நம் வசமே'ஆகும்.

நாம் கையிலெடுத்ததுமே, எம்மை முகமன் கூறி வரவேற்பது அதன் பல வர்ணங்களுடன் மிளிரும் அட்டைப்படம் தான். அதுவே பல எதிர்பார்ப்புகளைத் தர பக்கங்களைப் புரட்டினால்,

இவரின் கற்பனைச் சிறகுகள் யதார்த்தத்தையும் கைகோர்த்தபடி, வாசகர்களையும் சேர்ந்தே சிறகடிக்க வைக்கின்றன. இயற்கை, காதல், நட்பு, சமூக அவலங்கள்,பொதுநலம் என இவரின் ஒவ்வொரு கவிதையும் சமூகத்துக்கு




சொல்லவிழைவதோ ஏராளம். இவற்றில், அழகிய சொல்லாடலும் வர்ணஜாலம் காட்டி மனதைச் சொக்க வைக்கின்றன இப்படி... 'இதயச் சுவர்களில் இதமான வலிகள். உன் நினைவுக் கதிர்கள் துளைத்துச் செல்வதால்'

'விழியில் மோதிய
ஒளிக்கதிர்களைக் கேள்.
என் தேடலின் தவிப்பைச்
சொல்லித் தரும் உனக்கு'

சமூக அவலங்களைச் சாடும் இவரின் எழுத்தாணி சில கவிதைகளில் சாட்டையாய்ச் சுழன்றும், கூர்வாளாய் உச்சந்தலையைத் துளைத்து நெஞ்சுக் கூட்டில் இறங்கியும் எரியமிலத்தை வீசிச் செல்ல, வலியின் தாக்கமோ கடைசிவரை மாறாமல் மனதை உறையச் செய்கிறது.

'சிறகடித்துப் பறக்கின்றன
தேசியக் கொடிகள்.
துள்ளித் திரியும் சிறுமிகள்
காமுகர் பிடியில்'

'கல்வியின் இலக்குகளைக்
குழி தோண்டிப் புதைக்கிறது.
வீட்டுச் சுவரில்
பெரிதாகத் தொலைக்காட்சி '

வீசி வீசி அழைக்கின்றன
தேசியக்கொடிகள்.
இறங்கியே வரவில்லை
சுதந்திரக் காற்று'

'கடையிலே வாங்குகின்றோம்
சுவையான உணவு.
அன்பளிப்பாய் கிடைக்கிறது
கண்டறியா நோய்களெல்லாம்'

‘மதமென்னும் மதமேறி
மதமென்ற போர்வையிட்டோம்.
மனிதத்தைக் கருக்கிட்ட
மிதவாதிகளாய் நாம்’

நிதர்சனத்தை நாலே வரிகளில் நயம்படச் சொல்லியிருக்கிறார்.

சில கவிவரிகளில் வியப்பின் விளிம்பிற்கே எமை அழைத்துச் செல்லும் நூலாசிரியை, வாசிப்பவர்கள் மனதுக்குள் சம்மணமிட்டு அமர்ந்து விடுகிறார் என்றால் அது மிகையாகாது.

‘கிணற்றில் அள்ளிய நீருக்குள்
வாளிக்குள் ஒரு நிலா.
எப்படி வந்தது
கிணற்றிலும் மற்றொன்று’

காதலின் தவிப்பைச் சொல்லும் கவிவரிகள் எம்முள்ளும் ஓர் ஏக்கத்தை விதைத்துச் செல்ல தவறவில்லை. எடுத்துக்காட்டாய் இக் கவிதையைச் சொல்லலாம்.

‘சுவாசம் தொடர்கிறது
உன் பெயர் சொல்லியே.
என்றாலும் நானிங்கு
நடைப்பிணமாய்’

எமக்குள் குற்றவுணர்வைப் படரவைக்கும் இன்னுமொரு கவிதையைப் பார்ப்போம்.

‘இறைவனுக்கு அடுத்ததாக
இலக்கியத்தை நேசித்தேன்.
இறைவணக்க நேரத்திலும்
இதயத்துள் நுழைந்திடுதே’

பல கவிதைகள் தவறான ஆண்களைச் சாடியிருப்பினும், பின்வரும் கவிதை மூலம் ஆண்களுக்கு நாசூக்காக மகுடம் சூட்டிச் செல்லவும் மறக்கவில்லை நம் கவிதாயினி.

‘பெண்ணியம் பேசுகின்றோம்.
பெண்ணுரிமை கோருகின்றோம்.
ஆண்களின் பணிகளெல்லாம்
பெண்களால் முடியாதன்றோ’

இதுபோன்ற 175 கவிதைகள் இந்நூலை அலங்கரிக்க, 90 பக்கங்களுடன் இலங்கை விலை 300 ரூபாவுக்கு கிடைக்கிறது. இந்நூல் புத்தொளி -இலங்கை வெளியீடாகும்.

இவரின் அழகிய கவிகளூடாக ஒரு நெடும்பயணம் செல்ல மனம் விழைய, இவரின் அடுத்தடுத்த நூல்களை வாசிக்கும் எதிர்பார்ப்பை மனதில் ஏற்படுத்திய இக்கவிதாயினியின் ஆளுமை மிக்க எழுத்துகள், எதிர்காலத்தில் சரித்திரம் படைக்கவும் இவரின் பயணம் வெற்றியின் சிகரம் தொடவும் நல்வாழ்த்துகள்!

தொடர்புகளுக்கு :

**+94 76 2710271 / +94 77 1962247**

# எனக்கான தனிமை

உன் தனிமையிடம் நானும்
என் தனிமையிடம் நீயும்
சரணடைந்து...
தனிமைகளற்ற பெருவெளியில்
சிறகடிக்க எடுக்கப்பட்ட எத்தனிப்புகள்...

அடர்த்தியான வண்ணப் பூச்சுகள்
உராய்தலில் கலைந்து வெளிறிட...
மறைத்தலின் முகமான
அசைவுகளின் வேகம் தாளாது
உதிரத் தொடங்கும் இறகுகளின்
நடுவே வெளிச்சமாகின்றன
உடைந்த முதுகெலும்புத் தண்டுகள்!

வலிகளின் உச்சமா
உண்மை உணர்தலின் இன்பமா..
அலைமோதிய தனிமைகள்
நிதானித்து விடுபடுகின்றன!

இதோ...
உனக்கான தனிமையில் நீயும்
எனக்கான தனிமையில் நானுமாய்
நமக்கான வண்ணங்களுடன்
விரிகிறது
புதியதோர் பெருவெளி..

**அன்புச்செல்வி சுப்புராஜூ**

# மறைந்து போன மரபுகள்

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

அன்பொழுக அம்மாவென் றழைத்த தெல்லாம்
ஆங்கிலத்தில் மம்மியென மாறிப் போச்சு
இன்பநிலை காட்டிச்சோ றூட்டி விட்ட
இனியகாட்சி தொலைக்காட்சிப் பெட்டி யாச்சு !
நன்றாகப் பாடிவந்த தாலாட் டெல்லாம்
நாகரிகக் கைப்பேசிக் குரலாய் ஆச்சு
கன்னல்போல் பாலூட்டும் போதே சேர்த்துக்
கனித்தமிழை ஊட்டியதும் மாறிப் போச்சு !

வீட்டிற்குள் நோய்கிருமி நுழைவ தற்கு
விட்டிடாமல் மெழுகிட்ட சாணம் இல்லை
வீட்டிற்குள் வெப்பத்தைத் தணிப்ப தற்கு
வீசிவந்த பனையோலை விசிறி இல்லை !
வீட்டிற்குள் பாட்டியிடம் பேரன் பேத்தி
வியந்துகதை கேட்டிட்ட காட்சி இல்லை
வீட்டிற்குள் நடைபயில குழந்தை கையில்
வீற்றிருந்த நடைவண்டி ஏதும் இல்லை !

ஆல்வேம்பில் பல்விளக்கி ஆற்று நீரில்
அடித்தெதிர்த்து நீந்தியது போன தின்று
கால்கைகள் வீசியன்று நடந்த போது
கண்குளிரப் பார்த்தவயல் இல்லை யின்று !
சேல்விழியாள் முகத்தினிலே மஞ்சள் பூச்சும்
செந்நுதலில் குங்குமமும் இல்லை யின்று
பால்போன்ற மனத்துடனே பழகி வந்த
பாசமெல்லாம் எந்திரமாய் ஆன தின்று !

# ஏக்கம்

வெப்பம் தகிக்கும்
நினைவுகள் பொசுக்க
கண்களிலோ நீரலைகள்
பிரளயமாய்ப் புரள
தடம் மாறிப்போன
தலைவனை எண்ணியே
தவிக்கிறாள் நெஞ்சம்
தருவானோ தஞ்சமென.

**தமிழ் நிலா**

# மணந்திட வாராய்

இன்னமும் நானே உன்னினை வாலே
ஏங்கிடும் தாமரை யாகி
முன்னொரு நாளில் நடந்ததை யெண்ணி
மூழ்கியே திளைத்திடு வேனே?
அன்னமும் நீரும் அருந்தில ளானேன்
அதற்கொரு மருந்தையும் வேண்டேன்
சின்னவ ளாகிச் செருக்கினை நீங்கிச்
செங்கதிர் தேடிட லானேன்!

வரும்வழி யாவும் மலர்களைத் தூவி
வந்தவுன் கைகளும் எங்கே?
அரும்சுகம் தந்தே அரவணைத் தென்னோ(டு)
ஆடிய கால்களும் எங்கே?
கருநிறக் கூந்தல் தழுவிய மார்பும்
கவர்ந்திடும் விழிகளும் எங்கே?
நெருங்கியே வந்து நேசமும் தந்த
நெஞ்சமோ போனதும் எங்கே?

பசலையை நானும் நூலினில் கண்டேன்
பாவியென் உடலிலும் கண்டேன்
வசவுகள் என்னை வருத்திடும் போதும்
வஞ்சி,உன் நினைவினை உண்டேன்
நசநச வென்றே பெய்திடும் மழையாய்
நாயக வாட்டுவ தேனோ?
நெசவினில் அலையும் நூலிழை போல
நிதமுமே அலைகிறேன் நானே!

ஆண்களின் ஆசை வெளியினில் சொல்ல
ஆயிரம் வழிகளிங் குண்டு
தூண்களைப்போலவலிமையைக்கொண்டு
துயரமும் தாங்குவ துண்டு
ஊண்மிக உண்பார் படும்துயர் போல
உளத்தினுள் உழலுகின் றேனே!
வீண்செயல் என்று வீட்டினில் உரைத்தும்
வேதனை நகர்த்துகின் றேனே!

அடுத்தவர் வந்து மணங்கொளும் முன்பே
அன்பனே மாலையைத் தாராய்!
படுத்திடும் துன்பம் தெறித்துமே ஓடப்
பாவமும் போக்கிட வாராய்!
உடுத்திடும் ஆடை நழுவுதல் போல
ஓடிநீ ஒளிந்திடல் நன்றோ?
தொடுத்திடும் மலராய் உனக்கென நானே
தொடத்தொட மலர்வனே கண்ணா!

குன்றமர் வேலன் கோயிலி னுள்ளே
குலவிடும் வெண்புறா போல
அன்றொரு நாளில் வாக்கினைத் தந்தே
அணைத்ததை மறந்ததும் ஏனோ?
இன்றெனை விட்டே எங்குசென் றாயோ
ஏந்திழை ஏங்குகின் றேனே!
நன்றிது தானோ நாயக சொல்வாய்!
நத்திடும் எனைமற வாதே!

அத்தையின் மகனாய் ஆனவன் நீயே
அறிவினில் எனைக்கவர்ந் தாயே!
தத்தையைப் போலக் கூண்டினுக் குள்ளே
தவிக்கநீ விடுவதும் முறையோ?
வித்தையைக் காட்டி வீட்டினுள் நுழைந்து
வெஞ்சிறை உடைத்திடு வாயே!
கத்திடும் என்றன் குரலினைக் கேட்டுக்
கடிதினில் வந்திடு வாயே!

கல்வியைக் கற்றே உயர்ந்திடும் போதும்
காதலில் பேதைமை ஏது?
நல்வித மாக நடந்திடும் போதும்
நமையது வாட்டுவ துண்டே!
வல்வினை யாக வந்திடும் காதல்
வருந்தவும் செய்திடல் கண்டும்
வெல்மனம் கொண்டே எழுந்திடல் நன்றாம்
வெற்றியே மணந்திட வாராய்!

**இராம வேல்முருகன்**
வலங்கைமான்





# துணிந்து நில்

ஓடியது போதும் ஒளிந்தது போதும்
நிமிர்ந்து நின்று மோதிடப் பாரு
வாடியது போதும் வதங்கியது போதும்
எழுந்து நின்று வென்றிடப் பாரு

தூங்கியது போதும் தயங்கியது போதும்
துணிந்து நின்று போரிடப் பாரு
தாங்கியது போதும் தளர்ந்தது போதும்
தனித்துவம் காட்டிட உழைத்திடப் பாரு

உருகியது போதும் உடைந்தது போதும்
உளியாய் மாறி உயர்ந்திடப் பாரு
மருகியது போதும் கருகியது போதும்
மறுமலர்ச்சி பெற்றிட முயன்றிடப் பாரு

ஏற்றியது போதும் ஏங்கியது போதும்
எதிர்நீச்சல் போடக் கற்றிடப் பாரு
கற்றது போதும் கெட்டது போதும்
ஏற்றம் பெற்று எழுந்திடப் பாரு

குறுகியது போதும் குனிந்தது போதும்
குறையை கலைத்து நிமிர்ந்திடப் பாரு
சறுக்கியது போதும் நொறுங்கியது போதும்
பிறையை போல வளர்ந்திடப் பாரு

மயங்கியது போதும் மடிந்தது போதும்
மயக்கம் தெளிந்து மீண்டிடப் பாரு
நயந்தது போதும் நலிந்தது போதும்
நாளைய உலகை செதுக்கிடப் பாரு.

**நா.பாண்டியராஜா**
ஆர்.எஸ்.மங்கலம்.

# உயிரில் கலந்தவளே

எப்பொழுது
என்னில்
கலந்தாய் நீ?

என் பெயரின்
இனிமையை
உன் குரலில்
உணர்ந்த பொழுதிலா...

உன் விழிப் பேச்சினால்
எனை விழுங்கிய
பொழுதிலா...

உன் வாசத்தை
உணர்ந்தே
நீ இருக்கும்
திசையை
அறிந்த பொழுதிலா....

தனிமையில்
நான் தவித்த
பொழுதிலா...

உறக்கத்திலும்
உன் உருவத்தையே
கனவாகக் கண்ட
பொழுதிலா....

கூட்டத்தில்
உன்னை
மட்டுமே என் விழிகள்
தேடியலைந்த பொழுதிலா....

இருவரும்
நடக்கையில்
இயல்பாக
நம் கைகள்
இணைந்த பொழுதிலா ...

உன் காதல் காந்தம்
எனை ஈர்த்து
இறுக்கிய பொழுதிலா ....
உன் எச்சில்
ருசி சுவைத்த பொழுதிலா....

எப்பொழுது
என்னில்
கலந்தாய்
நீ....?

**ராஷித் ஜலால்**

# பாரியன்பன் - கவிதைகள்



1.

யாரோ என் அறைக்
கதவைத் தட்டுகிறார்கள்
காதில் கேட்கிறது ஓசை.
உங்கள் செவிகளில்
விழுகிறதா அச்சப்தம்?
ஆம் பலமாக....
அப்படி எனில்
கதவைத் தட்டுபவர்
நீங்கள்தான்.
சற்று பொறுத்திருங்கள்
கவிதை முடியும்
தருவாயில் இருக்கிறது.
இதோ வருகிறேன்
வந்து கொண்டிருக்கிறேன்
வந்துவிட்டேன்.

2.

விழித்தவன்
உறங்கப் பார்க்கிறான்.
உறங்கியவன்
விழிக்கப்பார்க்கிறான்.
படுத்தவன்
எழப்பார்க்கிறான்.
எழுந்தவன்
படுக்கப் பார்க்கிறான்.
அமர்ந்தவன்
நிற்கப் பார்க்கிறான்.
நிற்பவன்
அமரப் பார்க்கிறான்.
நடப்பவன்
ஓடப் பார்க்கிறான்.
ஓடுபவன்
ஓயப் பார்க்கிறான்.
தோற்றவன்
ஜெயிக்கப் பார்க்கிறான்.
ஜெயித்தவன்
அது
நிலைக்கப் பார்க்கிறான்.

3.

நானந்த நதியைக்
கடக்கப் போகிறேன்
நீயும் கடக்க விரும்பினால்
கடந்துகொள்.
நானும் கடக்கிறேன்
நீயும் கடக்கிறாய்.
இருவரையும் மகிழ்ந்து
கரையேற்றிய நதி
பிறிதொருவர் கடக்கவும்
எவ்வித நிபந்தனையுமின்றி
இப்போதும்
இருந்துகொண்டிருக்கிறது
நதி நதியாகவே...!

4.

என்னைப் பார்த்ததும்
மலரைப்போல்
நாணமுறுகிறாய்.
உன் மெல்லிய ஸ்பரிசங்களால்
அன்பின் கைகோர்த்தபடி
என்னை தழுவிச் செல்கிறாய்.
சொப்புக்குள் இருக்கும் நீரில்
பெருசமுத்திரம்
கண்ட மழலையாய்
உன்னைக் கண்டுணர்ந்து
மெய்சிலிர்க்கிறேன் நான்.

- பாரியன்பன்
குடியாத்தம் - 632602

## பாவேந்தல் பாலமுனை பாறூக்கின்

# மூன்று நவீன காவியங்கள்

நூல் மதிப்புரை : **வஃபீரா வஃபி**

பாவேந்தல் பாலமுனை பாறூக் எழுதிய' மூன்று நவீன காவியங்கள்' மற்றைய நூல்களுடன் ஒப்பிடுகையில், முற்றிலும் மாறுபட்டதாகும்.

உட்புறம் தூய வெண்ணிற காகிதத்தில் அச்சில் வார்க்கப்பட்ட கறுப்பு எழுத்துகள், சட்டென கண்களை ஈர்த்து மனதை வசீகரிப்பது தனிச்சிறப்பு!

இதில் முதலாவது காவியமான கொந்தளிப்பு. இதில் ஆதம்பாவாவின் மனம் அசை போடும் ஆழிப்பேரலையின் நினைவுகளும், வாழ்வாதாரமின்றி அல்லலுறும் மானிட வாழ்வியல் போராட்டங்களுமாய் வரிகளூடாக வலியை உணரச் செய்கிறார். இழப்புகளினூடாக அவருள் இழையோடும் சோகம், வாசிக்கும் எம்மையும் ஓர் ஆதம்பாவாவாக மாறி உலவச் செய்கிறது. கவிஞரின் காத்திரமான எழுத்துகளும், காவியத்தை வடித்திருக்கும் பாணியும் சம்பவங்களை எம் முன் காட்சிப்படுத்திச் செல்கின்றன.

'எண்ணப்பறவையின் இறக்கை ஒடிக்க இன்னும் அவரால் இயலவே இல்லை. கவிவரிகளில் பொதிந்துள்ள உண்மை, காவியம் முழுக்க எதிரொலிக்க வாசகர் மனதுக்கு சற்றே அழுத்தம் கொடுக்கிறார் கவிஞர். இன்றுவரை தீராப்பிரச்சினையாக சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும், சமூகங்களுக்கிடையிலான பிரிவினைகளைச் சுட்டும் இவரின் வரிகள் மனதைக் கூறுபோட, ஒரு தீர்க்கப்படாத வலி அலையலையாக எழுவதைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறுகிறது எம் மனம்.




'அடக்கப்படலாம்.நமது அடையாளங்கள் அகற்றப் படலாம்.நமது இருப்பே கேள்வியாகி ஒடுக்கப் படலாம்'

'இலங்கைத் தாயின் பிள்ளைகள் நாமே! இதனால், இணைந்து வாழ்வதை எவர்தான் வெறுப்பர். இனம் மதம் மொழியென இருக்கும் நமது தனித்துவத்தோடு அனைவரும் இணைந்து புரிந்துணர்வோடு அதிகாரங்களைச் சமமாய்ப் பகிர்ந்து வாழ்வதைத் தானே விரும்பிக் கேட்கிறோம்.' என ஒற்றுமையை வலியுறுத்தும் அவரின் பொதுநலமிக்க வரிகள் நம் சமூக மக்களின் மனத்திரையிலோடும் எண்ணங்களைப் பிரதிபலித்து, வாசகர் மனதை இதமாக தொட்டுச் செல்கின்றன.

அனர்த்த நிவாரணங்கள் தகுதியற்றோரைப் போய்ச் சேர்வதும், பாதிக்கப்பட்டவர்கள் நிலையோ படுமோசமாக இருப்பதையும் சுட்டும் போது மீண்டும் மனதில் அதே வலியை உணரமுடிகிறது.

'அழுதே விட்டது வானம். கடலின் நீரைச் செருகியிருந்த மேக இமைக்குள் தூசுகள் படிய அழுதே விட்டது வானம். சிறு சிறு தூறல்' என அழகியலை அள்ளித் தெளித்து அசத்துகிறார்.

''கொந்தளிப்பு'' இலங்கை அரச சாஹித்ய மண்டல சான்றினைப் பெற்றுக் கொள்ள, இலங்கை அரச சாஹித்ய மண்டல விருது, கொடகே சாஹித்ய மகாகவி உருத்திரமூர்த்தி விருது யாழ் இலக்கியப் பேரவைச் சான்று எனப் பல விருதுகளைத் தமதாக்கிக் கொண்ட தோட்டுப்பாய் மூத்தம்மா இரண்டாவது காவியமாக இந்நூலில் இடம்பிடிக்க, அது ஒரே சமூகத்தின் முரண்பட்ட கருத்துகளையும், கதையின் நாயகி

தீய குணம் கொண்ட கணவனிடமிருந்து துணிவாக மணவிலக்கு பெறுவதையும். தந்தையின் விருப்பத்திற்கிணங்க மறுமணம் செய்வதையும் சொல்லிச் செல்கிறது.

தோட்டுப் பாய் மூத்தம்மா முஸ்லிம் மக்களின் பண்பாட்டுக் கோலங்களை அழகுறப் பதிவு செய்கிறது. திருமணச்சடங்கு, பிறப்புச் சடங்கு, பெரிய பிள்ளைச் சடங்கு, மையத்துச் சடங்கு என்பனவும் சுவைபடச் சொல்லப் படுவதனால் காவியம் கனதி பெறுகிறது.

கிராமிய வழக்குச் சொற்களை ஆங்காங்கே அள்ளியிறைக்கும் நூலாசிரியர், அத்தியாயங்களின் முடிவில், அதற்கான விளக்கங்களையும் கொடுத்திருப்பது வெகு சிறப்பு.

மூன்றாவதாக வரும் 'எஞ்சியிருந்த பிரார்த் தனையோடு' யுத்தத்தின் பாதிப்புகளையும் அதனைத் தொடர்ந்து வரும் இன்னல்களையும் சொல்ல, இக்காவிய நாயகனோ அவன் இவன் என படர்க்கைப் பெயரால் அழைக்கப் படுகிறான். இச்சமுதாயத்தில் இன்னல்களுக்காளான பெரும்பாலானோரைப் பிரதிநிதிப்படுத்துமுகமாகத்தான் இவனைக் கவிஞர் அடையாளப் படுத்தவில்லை போலும்.

யுத்தத்தின் கொடூரங்களுக்கு முகம் கொடுத்தவர்கள் மனங்களில் தொக்கி நிற்கும் கேள்விகளுக்கு இன்றுவரை விடை கிடைக்கவே யில்லை.

அதிகாரத்திற்கும் ஆயுதத்திற்கும் அச்சப் பட்டு அடங்கி இருப்பதா?

அன்றேல் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒற்றுமைப்பட்டு இணங்கி வாழ்வதா?

இது போல் பற்பல கேள்விகள்......

'வேலிக்கு வைத்த முள் காலுக்குத் தைப்பதேன்' எனும் வரிகளில் வேலியே பயிரை மேய்வதை மறைமுகமாகச் சாடுவதைக் காண்கிறோம்.

இந்தக் கவிஞரின் காத்திரமிக்க எழுத்துகள் முகமறியா 'அவனின்' எண்ணங்களைப் பிரதிபலிக்கும் கேள்விக்கணைகளாய் சுழலவிட்டு, அவனின் பொதுநலமான ஏகபிரார்த்தனையோடு காவியத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாலும், வாசித்த வாசகரின் அகத்திரை கிழித்து நிதர்சனத்தை உலவ விட்டிருப்பதில் கவிஞர் வெற்றி பெற்றிருக்கிறார்.

பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அவர்களின் சிறப்பான, நீண்ட 10 பக்க அணிந்துரையோடு, ஜீவநதியின் 147வது வெளியீடாக 170 பக்கங்களுடன் புதுமை சேர்க்கும்... இந்நூலின் விலை இலங்கை ரூபா 400/- புத்தகப் பிரதிகள் வேண்டியவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்....

**+94 775367712 / +94 756217680**

தமிழுலகில் பொன்விழாக் காணும் இக்கவியாளுமையின் கனவுகள் மெய்ப்படவும், வெற்றி மேல் வெற்றி பெற்றிடவும் இனிய நல்வாழ்த்துகள்! ■



# இமை நனைத்த இரவுகள்

மனம் உரசும்
ஆசை நினைவை
மிதமான என்னின்
மீளாதக் கற்பனையில்
எந்தன் புலம்பலை
புதியக் கவிதையாக்கி
இமை நனைந்து
இரவில் எழுதுகிறேன்
நின் துரோகத்தின்
துயரத்தில் துடிக்கும்
துள்ளும் இளம்
மனதின் குமுறல்
செந்நிறக் குருதியால்
இதயத்தை நனைக்குதே
உறவின் தவிப்பை
உணர்ந்து வருவாய்
மண்ணோடு மரணம்
அழைக்கும் முன்
உயிர்க் காதலில்
உண்மையை உரைக்க

**ச. ஜெயலட்சுமி**

# நம்ம ஊரு கதைகளின் நாயகன் ரமேசின் கதை...

- எல்.முருகராஜ்

நா.ரமேஷ்.... 27 வயது வரை சந்தோஷமாக சராசரியாக உலா வந்த எளிய குடும்பத்தின் இளைஞர், சொந்த தொழில் செய்து வயதான பெற்றோரை தெய்வமாக மதித்து காப்பாற்றி வந்தவர்.

அடிக்கடி காலில் ஏற்பட்ட வலிக்கு காரணம் 'மஸ்குலர் டிஸ்ட்ரபி' எனப்படும் தசை திசு நோய் என்பது தெரியவந்தது. இந்த நோய் வந்தால் நடக்க முடியாது, விழுந்தால் கை ஊன்றி எழ முடியாது, எங்கே போனாலும் ஊர்ந்து ஊர்ந்துதான் போகவேண்டும், அப்படி பத்தடி துாரம் போவதற்கே



ஒரு மணிநேரமாகிவிடும் உடல் எடை கூடிக்கொண்டே போய் படுத்த படுக்கையில் இருக்க நேரிடும் ஒரு நாள் இறக்கவும் நேரிடும்.

நாளாக நாளாக உடல் அவயங்களை ஒவ்வொன்றாக இந்த நோய் தின்று கொண்டே இருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் ஒரு நாள் இதய தசையை தாக்கி மரணத்திற்கு கொண்டு சென்றுவிடும் இன்னும் மருந்து கண்டுபிடிக்க முடியாத இந்த நோய்க்கு ஆளானவர்களில் ஒருவர்தான் நமது ரமேஷ்.

இவரிடம் பாதிக்கப்படாமல் இருப்பது நல்ல சிந்தனையும், எழுத்தாற்றலும் மட்டும்தான் இதை வைத்து நிறைய துணுக்குகள், கதை கவிதைகள் எழுதி அது பிரசுரமாவதன் மூலம் வரும் வருமானத்தில்தான் தன்னையும் பார்த்துக் கொண்டு வயதான பெற்றோர் களையும் பராமரித்துக் கொண்டு வருகிறார்.

பழனியில் இருந்தவர் வாடகை கொடுத்து கட்டுப்படியாகாததால் பக்கத்தில் உள்ள நெய்காரப்பட்டி என்ற கிராமத்திற்கு இடம் பெயர்ந்துவிட்டார்

இத்தனை சிரமங்களுக்கு நடுவிலும் இவர் செய்துவரும் சாதனையைப் பார்ப்போம்

இன்றைய இயந்திர உலகில் குழந்தைகளுக்கு என்ன வேண்டுமானாலும் கிடைக்கிறது ஆனால்

கதை சொல்லத்தான் ஆளும் இல்லை அவர்களிடம் சொல்வதற்கு நல்ல கதையும் இல்லை.

குழந்தைகளை எவ்வளவு பிடிக்குமோ அந்த அளவிற்கு குழந்தைகளுக்கான கதைகள் எழுதவும் ரமேஷ்க்கு ரொம்பபிடிக்கும்

நல்லொழுக்கத்தை மையப்படுத்தி பண்பாட்டை வலியுருத்தி இவர் எழுதும் சின்னச் சின்ன கதைகளை படிக்கும் எந்த குழந்தையும் நிச்சயம் பெற்றோரை நேசிப்பர் மறந்தும் சிறு தவறு செய்யக்கூட யோசிப்பர்.

இவர் குழந்தைகளுக்காக எழுதிய கதைகளை தொகுத்து நம்ம ஊரு கதைகள் என்று ஒரு புத்தகம் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக பாகம் இரண்டும், இப்போது பாகம் மூன்றையும் வெளியிட்டுள்ளார்.

மூன்றாவது பாகத்தில் சிறுவர்களுக்குமட்டுமின்றி பெரியவர்களுக்கும் நீதிக்கதைகள் சொல்லியிருக்கிறார். குழந்தைகளுக்கான எந்த புத்தகத்திலும் இல்லாத தனிச்சிறப்பு இவரது புத்தகத்தில் உண்டு அது புத்தகம் நெடுகிலும் காணப்படும் விலங்குள் பறவைகளுக்கு குழந்தைகளே வண்ணம் தீட்டி மகிழலாம் என்பதுதான்.

சிறுவர் கதைகளை படிக்கும் போதே அதன் போக்கும் முடிவும் தெரிந்துவிடும் என்பதால் பெரியவர்கள் இதனை படிப்பதில்லை ஆனால் ரமேஷின் கதைகளில் முடிவை ஊகிக்கமுடியாதபடி 'ட்விஸ்ட்' என்ற சொல்லக்கூடிய சுவாரசியமான திருப்பங்களும் இருக்கின்றன.

உதாரணமாக மழையில் நனையும் ஒரு பெரியவரை பார்க்கும் சிறுவன் தன்

## ஹைக்கூ

குழந்தைகள் வீட்டில்
மிதிபடும் இடமெல்லாம்
பொம்மைக்காடு

குழந்தைகள் சண்டை
அதிகம் அடிவாங்கின
கரடி பொம்மைகள்

பிள்ளையின் பயணம்
நிம்மதியின்றி விடிகிறது
தாயின் முழு இரவு

**ஷர்ஜிலா யாகூப்**

கையில் உள்ள குடையை கொடுத்து 'வீட்டிற்கு நனையாமல் செல்லுங்கள் தாத்தா' என்று சொல்கிறான்.

'மழைவிட்டதும் வீட்டில் கொண்டு வந்து தருகிறேன்' என்று சொல்லி தாத்தாவும் குடையுடன் செல்கிறார், மழைவிட்டு சில நாளானபிறகும் குடையை தாத்தா திருப்பிக் கொடுக்கவில்லை.

திடீரென ஒரு நாள் அந்த சிறுவன் தாத்தாவை தேடிவருகிறான் தாத்தா குற்றஉணர்வோடு நிற்கிறார் அடுத்து என்ன நடக்கும்! சிறுவன் குடையைக்கேட்டு தாத்தாவிடம் சண்டை போடப் போகிறான் என்று தானே நினைப்பீர்கள்? அதுதான் இல்லை இப்போது சிறுவன் கையில் புதுக்குடை அதை தாத்தாவிடம் கொடுத்து, 'உங்களிடம் நான் கொடுத்தது பழைய குடை அதில் மழை ஒழுகும் இந்தாருங்கள் புதுக்குடை' என்று தந்துவிட்டு நடப்பான். என்னல்லாம் முடியுமோ எப்போதெல்லாம் முடியுமோ அதை மற்றவர்களுக்கு செய்யுங்கள் என்று சொல்லும் 'ஈகை' நீதிக்கதை இது.

கதைகளில் குரங்கு,முதலை,சிங்கம்,



# மனிதநேயம்

தெருமுனைப் பள்ளிக்கூடத்தின்
வாயிலருகில் திறந்தவெளி
விற்பனையில் கூறுகட்டப்பட்ட
நெல்லிக்கனியும் கொடுக்காப்புளியும்.
உறவுகள் கைவிரித்தச் சூழலில்
பள்ளிக்கூட முகப்பே
வசிப்பிடமானது.
உடல் தளர்ந்தாலும்
உள்ளம் தளராத வாழ்வு
சில்லறை வியாபாரத்தில்
வயிற்றைக் கழுவும் பாட்டிக்கு
அந்தப் பள்ளிக்கூடத்து
சிறுவர் சிறுமிகளே
பெயரன் பெயர்த்திகள்.
பலரும் வியக்கும்படி
பின்னொருநாளின்
தொடர்மழைப் பொழிவில்
தங்கும் இடமறியா
அந்த மூதாட்டியிடம்
பள்ளிக்கு வந்த சிறுவனொருவன்
கொடுத்துவிட்டுச் சென்றான்
அவனது குடையை !

**கா.ந.கல்யாணசுந்தரம்**

நரி, கிளி, கரடி மட்டுமல்ல ஒட்டடைக் குச்சியும் விளக்குமாறும் கூட பேசும், நீதி சொல்லும்

பெற்றோர்களின் சிரமங்களை உணரா மல் இன்றைய குழந்தைகள் உயர்ந்த விலை செல்போன்கள் உள்ளிட்ட பொருள்களை கேட்கின்றனர் இந்த மாதிரி குழந்தைகளை 'வளர்ப்பு' என்ற கதையில் வரும் ஆசிரியை எப்படி திருத்தினார் என்ற ஒரு விஷயத்திற்காகவாவது தமிழ் படிக்கத்தெரிந்த அத்தனை குழந்தைகளிடமும் இந்த கதைப்புத்தகம் போய்ச்சேரவேண்டும்.

எழுதத் தெரிந்த ரமேஷ்க்கு இந்த புத்தகங்களை விற்பனை செய்ய திராணியும் இல்லை தெம்பும் இல்லை ஆகவே 'நம்ம ஊரு கதைகள்' என்ற இந்த கதைப்புத்தகத்தை நீங்கள்தான் கேட்டு வாங்கி படிக்கவேண்டும் மொத்தமாக வாங்கி குழந்தைகளுக்கு படிக்கக் கொடுக்கவேண்டும்.

உடுமலைப்பேட்டையில் உள்ள ஜி.வி.ஜி., விசாலாட்சி பெண்கள் கல்லூரி சமீபத்தில் இவரது திறமையை ஊக்கப் படுத்தும் வகையில் இவரை தமது கல்லூரிக்கு நேரில் வரவழைத்து கவுரவித்து மகிழ்ந்ததுடன் இவரது புத்தகங்களையும் அதிகமாக வாங்கி மாணவியருககு விநியோகத்து மகிழ்ந்தது.

வேறு எந்த வகையிலும் கையேந்தாத தன்மானமிக்க எழுத்தாளர் ரமேஷ்க்கு நீங்கள் செய்யும் பெரிய உதவி இந்த புத்தகம் விற்க உதவுவதுதான்.

எழுத்தாளர் தன்னம்பிக்கையின் சின்னம் ரமேஷிடம் பேசுவதற்கான எண்கள்: +919750474698, +918610877108. அவரது மெயில் முகவரி:
rameshsudalai1980@gmail.com

# கிராமத்தில் ஒருநாள்

அதிகாலை சேவல் சத்தம் எங்கள் அலாரம்.
ஆதவன் மேலெழுந்தால் ஊரே கொள்ளும் அலங்காரம்.
வண்டிமாட்டுச்சத்தம் ஊரின் முதல் சங்கீதம்.
வரப்புகளின் வழியே பணிக்கு விரைந்திடுவர் மக்கள்.
வாகன இரைச்சல்,புகை, வழிநெரிசல் இல்லை
வந்ததில்லை வழிப்பறிகள்,கெடுபிடிகள் தொல்லை.
விபத்துக்கள் ஆபத்துக்கள் என்றெதுவும் நிகழ்ந்ததில்லை
வெளிநாட்டு வாழ்வில்கூட இந்தளவு மகிழ்ந்ததில்லை.
சின்னகுளத்தில் மூழ்கிக்குளித்தெழுந்து
அன்னை தயார்ப்படுத்த அவசரமாய் புறப்படுவோம்.
பசுவின் பால் போதும் பகல்வரைக்கும் பசிக்காது.
பள்ளிசென்று வந்ததுமே துள்ளி வயல் சென்றிடுவோம்.
அப்பாவிற்கான ஆகாரத்தில் அரைவாசி உண்டபின்னே
அங்கிருக்கும் வரப்புகளில் எங்கள் ஆட்டம் தொடங்கும்.
பட்டம் விடுவோம் பட்டாம்பூச்சி பிடிப்போம்
சட்டங்கள் இருந்ததில்லை ஆயினும் சரிவரவே இருந்தோம்.
திங்களின் ஒளியில் பலகதைகள் பேசி
எங்களின் இரவுணவும் நிறைவிற்கு வரும்.
தாயின் மடியில் தலைசாய்த்து அயர்வோம்.
மாய உலகில் இதுபோல் ஒரு மெய்வாழ்வில்லை.
பழிசுமக்கும் வருங்காலம் பாவம் இதை
பால் விளம்பரங்களில் மட்டுமே பார்த்தறியும்.

**- பிரகவி.**

(ஆர்.ஜே.பிரகலாதன்.உடுவில்,யாழ்ப்பாணம்.)



# கதைக்கானத் தலைப்பு

# பின்னாலே... சொல்லி இருக்கேன்...

உதயசகி...❤

கதைக்கான தலைப்பை ஆரம்பத் தில் கூறுவதை விட கதையின் முடிவில் கூறினால் பொருத்தமாகயிருக்குமெனத் தோன்றியது... அதனால் தலைப்பை இறுதியில் கூறியுள்ளேன்... இக் கதையை வாசிக்கையில் இப்படியெல்லாம் நடக்குமா..??.. என்ற கேள்வி எழுந்தால்... அந்த எதார்த்தங்களைக் கொஞ்சம் புறந்தள்ளிவிட்டு வாசித்துப்பாருங்கள்... காரணம் இப்படி நிகழ்ந்தால் எப்படியிருக்கும்..??..என்ற கேள்வி எனக்குள் எழுந்ததின் விளைவே இக்கதை... பெரிதாக எதையுமே ஆராயாமல் கற்பனையில் உதித்ததை எழுத்துக்களில் கோர்த்துள்ளேன்... அவ்வளவே... எழுதிய கதையை விடவும் அதற்கான அறிமுகம் பெரிதாகப் போகிறது போல்... அதனால் தாமதிக்காது வாருங்கள் கதைக்குள் செல்லலாம்....

நான்கு சுவர்கள் மட்டுமே கொண்ட அறையினை எப்போதுமே விரும்புவன்தான் அவன். ஆனால் அந்த அறை மட்டும் ஏனோ அவனிற்குக் கொஞ்சமும் பிடித்தமானதாக இருக்க வில்லை. அந்த அறை முழுவதும் சூழ்ந்திருந்த இருட்சி அவனைக் கொஞ்சம் கொஞ்சமாய் அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இதற்கு முன்னர் இருளையே காணாதவன் அல்ல அவன். சொல்லப்போனால் பல இரவுகளில் பருவமடைந்திடாத பிஞ்சு களைக் கூட கசக்கிப் பிழிந்து எறிந்தவன்தான் அவன். ஆனால் அப்போதெல்லாம் அந்த இரவுகளை ருசித்துக்கொண்ட அவனின் மனம் இப்போது முழுவதுமாகவே அரண்டு போயிருந்தது.

தான் இப்போது எங்கிருக்கிறோம் என்ற நினைவு சிறிதளவு கூட அவனிடத்திலிருக்கவில்லை. அவனின் கடந்த காலம் கூட அவனின் நினைவலைகளை விட்டு கொஞ்சம் கொஞ்ச மாய் அகன்று கொண்டிருந்தது. அதற்காக அவனது கடந்த காலத்தில் அவனொன்றும் நற்காரியங்களை விதைத்தும் வைத்திருக்கவில்லை. அவன் கடந்து வந்த பாதை முழுவதுமே பல கன்னிகைகளின் குருதிக் கண்ணீரினைத்தான் பரிசாகப் பெற்றிருந்தான்.

பலமென்பது ஆணிற்கு பெண் மையை காப்பதற்கு அந்தக் கடவுளால் வழங்கப்பட் டவரப் பிரசாதமென்றால்... இவன் அதை அந்தப் பெண்மையின் மென்மையைச் சோதித்துப் பார்க்கும் ஆயுதமாக மட்டுமே பயன்படுத்திக் கொண்டான்.தன் இச்சை தீர்க்க அவன் இரக்கமின்றி பலரை வதைத்த கதைகளை இன்று கேட்டாலும் அவனில்லத்து அந்த அறையின் சுவர்கள் கதை கதையாய் சொல்லும்.



கண்களிருந்திருந்தால் அந்த உயிரற்ற நாற்சுவர்கள் கூடக் கண்ணீர் வடித்திருக்கும். ஆனால் இவனோ உயிரைக் கொண்டிருந்தும் பல உயிர்களை உதிரம் வடிய வடிய உருக்குலைத்துக் கொன்றான். இவனொருவனால் மாத்திரமே கனவுகளைத் தொலைத்து கருக்களைச் சுமந்த கவிதைகள் ஏராளம். இருந்தும் அடங்கவில்லை இந்தக் கயவனின் பேதை மோகம். அதனால்தான் இன்று அவனிற்கு இப்படியானதொரு நிலையினைத் தண்டனையாகக் கொடுத்திருக்கிறது காலம்.

ஆனால் இப்போதும் கூட அவனின் ஆணென்ற ஆணவம் அடங்கியதாகத் தெரியவில்லை. அந்த அறையைவிட்டுச் செல்வதற்கு அவன் வெகுவாகவே முயன்று தோற்றுப்போயிருந்தான். பல மனைத்தையும் கட்டில் மேலே கதறிய பெண்களிடம் மட்டுமே

# அரசியல் வியாதி

(விளம் மா தேமா)

பேயதும் ஆளும் மண்ணில்
பெருமைகள் என்ன வேண்டும்!
தூயதும் கெட்டுப் போகும்
தொல்லையர் வாழும் காலம்!
தீயதை நெஞ்சம் கொண்டு
தெளிந்த முகமே கொள்வர்!
வாயதில் செழுமைக் கொட்டும்
வஞ்சகர் நெஞ்சம் தாமே!!

சிரிக்கவே பேசி நாளும்
சிந்தையைத் திரிப்பர் கள்வர்!
நரிகளின் இனத்தை விட்டு
நம்மிடை பிறந்த வீணர்!
சரியென நம்ப வைத்துச்
சதிகளில் வீழச் செய்வர்!
பிரிவினை விதைத்தே இங்குப்
பிழைப்பினை நடத்தும் மூடர்!

நொடிதனில் வேடம் பூண்டு
நோகவே செயல்கள் செய்யும்
வெடியெனப் பேசித் துள்ளும்
வீணரைக் கண்டால் ஓட்டு!
வடிவமே பலவும் பெற்று
வனப்புடன் நடிக்கும் கூட்டம்!
துடிப்புடன் அறிந்து நீயும்
துரத்தியே வெளுத்துப் போக்கு!

**பால தியாகராசன்,**
கோவை

# சிரிக்க மட்டும்

**மனைவி :** ஏங்க... கொஞ்சம் வாங்க... குழந்த அழுவுது...

**கணவன் :** அடி செருப்பால!... உன்னை எவண்டி மேக் -அப் இல்லாம குழந்தை பக்கத்துல போகச் சொன்னது?

காட்டிப் பழகிப் போனவன் என்பதால், இப்போது அவனது பலம் கூட அவனில் பலவீனமாகிப் போனது.

அவனதுமூளைகூடவேலைநிறுத்தம் செய்திருந்தது. அவனது வாழ்க்கையில் அன்று அப்படி யொரு விபத்தினை அவன் சந்தித்திருக்காதிருந்தால் இன்று அவன் இப்படியொரு சிறைக்குள் மாட்டிக்கொள்ள வேண்டிய தேவையே இருந்திருக்காது. அந்த விபத்து நிகழ்ந்த போதே அவன் சுயநினைவினை மொத்தமாய் இழந்திருந்தான். கண் திறந்து பார்த்த போது அவனால் தான் இங்கு எப்படி வந்தோம் என்பதில் தொடங்கி, எங்கிருக்கிறோம் என்பது வரையில் எதையுமே அறிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால் அவனின் உடல் முழுவதும் வழிந்து கொண்டிருந்த இரத்தம் அவனை இறப்பிற்கு அருகே அழைத்துச் சென்று கொண்டிருந்தது.ஒரு காலத்தில் உதிரத்தின் வாசனையை உச்சிமுகர்ந்து ரசித்துக் கொண்டவன். இன்று அந்த உதிரத்திற்குள் தானே முழுவதுமாய் மூழ்கிக் கொண்டிருந்தான். அவனது மனம் விடுதலைக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவன் கேட்ட அந்த சுதந்திரம் அவனைத் தள்ளி நின்று வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருந்தது.

என்னதான் காலம் பலவிதமான வேடிக்கைகளைக் காட்டினாலும். கடவுள் போடும் கணக்கிற்கு கட்டுப்பட வேண்டிய கடப்பாடும் உள்ளதே. ஆம் அதற்கு மேலும் அவனை அங்கே அடைத்து வைக்க வேண்டிய தேவையிருப்பதாக அவருக்குத் தோன்ற வில்லை போல். அதனால் அவனுக்கான மன்னிப்பையே தண்டனையாகக் கொடுத்து தன் ஆசிர்வாதங்களை வழங்கிக் கொண்டார் அவர். அவன் அத்தனை மாதங்களாய் கதறிக் கதறிக் கேட்ட விடுதலை அப்போது அவனை அரவணைத்துக் கொண்டது...

அவனது அறையின் வாசல் திடீரெனத் திறந்து கொண்டது. இரு கரங்கள் அவனின் தலையினை மெது மெதுவாய் வெளியே இழுத்துக் கொண்டன. அவனுக்கு அங்கே என்ன நடக்கின்றதென ஒன்றுமே புரியவில்லை. அவனைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டவர் உதிர்த்த வார்த்தைகள் மாத்திரம் அவனது செவிகளில் தெள்ளத் தெளிவாகவே கேட்டது. ஆனால் அந்த வார்த்தைகள் அவனுள் மகிழ்வை விதைப்பதற்குப்பதில் மரணத்தை விதைத்துச் சென்றது.

“வாழ்த்துகள் மா... உங்களுக்கு பெண் குழந்தை பிறந்திருக்கு...”

இந்தவார்த்தைகள்எப்படிஅவனுள் குளிர்மையை ஏற்படுத்திச் செல்லும். கடந்த கால வாழ்க்கை அவனிற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம். ஆனால் அவனின் நிகழ்காலத்து வாழ்க்கை இனி அல்லவா அவனின் செயல்களுக்கான பதில்களை வழங்கக் காத்திருக்கிறது. நடந்த அந்த நிகழ்வு அவனை வெகுவாகவே பாதித்திருக்க வேண்டும். அதுவரை காலமும் அவன் அடக்கி வைத்திருந்த அழுகை மொத்தமாய் வெடித்துக் கொண்டு வந்தது. மழலைத்தொனியில் ஒலித்த அந்தக் குரலில் கடந்த பிறவியில் அவனால் மடிந்து போன பெண்களின் ஓலமும் ஓங்கியே ஒலித்துக் கொண்டது.

“மரணம் முடிவுரை அல்ல...”

“கல்லறையில் கரைந்து போகும் பாவங்கள் கருவறை வரையிலும் தொடரலாம்...”

■



# சேற்று வயலோரமாய் சிந்திய புன்னகையில்

என்னடிச் சிங்காரி
சேற்று வயலோரமாக நேற்றுநீ
சிந்தியப் புன்னகையில்
தோற்றுத்தான் போனேனடி
தோகை மயிலே
ஏறுதடி எம்மனசு

ஏத்தமிறைச்ச நீர் வாய்க்காலாக
சித்திரை மாசக்  குளிர் நிலவே
நித்திரை கெட்டே
சுத்தி சுத்தி அலையுறேனே
பாதகத்திப்
பத்த வச்ச எம் மனச
பக்குவமாய் அணைப்பதெப்போ?

பாசம் வச்ச பைங்கிளியே
வேசக்காரன் நானல்ல
மோசம் போக வைப்பேனா?
மேகமென வந்திடுவாய்
மோகம் தைத்த நெஞ்சினுள்
தாகம்தனைத் தீர்த்திடத்தான்

அய்யா அழகு ராசா
ஆச வச்சா
இந்த அன்பு ரோசா
போட்டிடத்தான் வாறேனே
உன் ஆச நெஞ்சினிலே
வண்ணக்கோலம்
மாலை ஒண்ணு நீ போட்டா
மாமன் மனசிலே
வெளக்கேத்தும் விரைவாக
விளைஞ்சி நிக்கும் நலமாக..

கவிஞர் தென்றல் கவி
(தமிழ்ச்சிட்டு)

# மரண தீர்ப்பில் நான்

**- D. மோகன் ராஜ்**

எழுதுகிறேன், மரணத்தை தழுவும் முன்; இதுவே கடைசி பதிவாகவும் எனது மரண ஓலையாகவும்!

முகநூல்! இன்றைக்கிது உலகெங்கும் பரவி உள்ள ஓர் உன்னத, அதேசமயம் எளிய ஊடகம்...! இது தான் இன்று என் உயிரை குடிக்க காரணமாகிறது...!!



"... நான் முகநூலுக்குள் நுழைகிறேன் (அழைத்து வரப்படுகிறேன்) முதன்முதல் அனுபவம் எனக்கு! அதுவரை கேள்வி - ஞானம் மட்டுமே இந்த முகநூல் பற்றிய பரிச்சயம். விஞ்ஞான வளர்ச்சி; இது கொஞ்சம் வளராமலே இருந்திருக்கலாம்! அல்லது என் போன்றோரை ஈர்க்காமலும் இருந்திருக்கலாம்.

என்செய்ய, விதி என் வாழ்வில் முகநூல்வாயிலாக விளையாடியது இப்படியோர் துவக்கத்துடன்?

முகநூல்! அதுவரை கண்டிராத அப்படியோர் புது உலகம்...! புளங் காகிதம் கொண்டேன் இவ்வுலகில் காலெ டுத்து வைத்தவுடன்...விரல்விட்டு எண்ணும் என் நட்புவட்டம் எண்ணி லடங்கா எண்ணிக்கையில் விரிந்தது...! பேசினோம், பழகினோம், பகிர்ந்து கொண்டோம் பற்பல விடயங்களை.... எழுத்துக்கள் என்னை ஆகர்ஷணம் செய்தன! நானும் எழுத துவங்குகிறேன், என் எழுத்துக்களும் அழகழகாய் உயிர்த்தெழுகின்றன! ஆச்சர்யம்! எனக்குள் இத்தனை ஆற்றலா? என்று. அடுத்தடுத்த பதிவுகள் குவிகிறது ஆதரவுகளும் உற்சாக கரம் கோர்க்கிறது. இப்படியாக என் நாட்கள் நகர்கின்றன...!

இப்படிப்போகும் என் முகநூல்

பயணத்தில் மனங்கவர் ஒர் பெண்ணின் நட்பு என்னை அதிகமாய் பாராட்டுகிறது! மெல்ல மெல்லமாய் என் இதயம் தொடுகிறது! அது விஸ்வரூபமும் எடுக்கிறது அழகிய காதலாக. என்னையும் அறியாது தன்னலம் மறக்கிறேன் அவளுடன் உரையாடும் காலங்களில். அவள் என்னுள் வேரூன்றி நிற்கிறாள் ஆலமரமாக. இப்படியாக அவளுடன் என் நட்பு காதலாகி கவிபாட வருடங்கள் உருண்டோடின...!

நேற்று அவள் என்னோடு நீண்ட நேரம் பேசினாள் நேரம்போவதும் தெரியாத அளவுக்கு பேச்சு என் மூச்சோடு கலந்திருந்தது...! (நேற்று, அது கடக்காமலே இருந்திருக்கலாம்...???)

இன்று அவளிடமிருந்து அழைப்பு ஒலி மீண்டும், பேசினேன் அவள் என் ஊருக்கு விஜயம் செய்திருக்கிறாள் என் மீதான முழு நம்பிக்கையுடன். மணம்முடிக்க இல்லம் துறந்து என்னை காண! கல்யாணம் பண்ண புறப்பட்டு வந்திருக்கிறாள் என்னிடத்தும் தகவல் பகிராமல். என்ன முடிவு இது என நான் வினவ; நல்ல முடிவு தான் விரைந்து புறப்பட்டு வாருங்கள். நான் தனியாக நிற்கிறேன். தெரியாத ஊரில் என்கிறாள். நானும் விரைந்து செல்ல முனைகிறேன் கல்யாணம் பண்ணவல்ல அவள்மீதான நேசம் காரணமாக. காரணம் அப்போது அவளின் பாதுகாப்பு? பாதுகாப்பது என் கடமை என்னும் உணர்வே ஓங்கியது...!

சென்றேன் அவள் வந்திறங்கிய பேருந்து நிலையம் வாயினுள், அதிர்ச்சி அங்கு பூதாகாரமாக நின்றிருந்தது...! ஆம், அவளை எப்படியெல்லாமோ கனவுகண்டிருந்தேன்! என்னென்னமோ யூகங்கள் கொண்டிருந்தேன் அவளையும் அவளின்அழகையும்எண்ணிஎன்னுள்...! என் சொப்பனங்கள் அத்தனையும் அந்நொடியிலே சிதறிவெடித்தது, என் இதயம் துடிதுடித்தது...! காரணம், அவள் குரலில் மட்டுமே மயக்கம் கொண்டிருந்த நான் அவள் முகம் காணும் துர்பாக்கியம்! அன்று எனக்கு நேர்ந்தது. காணப்பிடிக்கலை, அவளோடு பேசப் பிடிக்கலை, அவளை பற்றிய கவலையும் மறந்து போன நிலையில் இப்போது நான்...!!

என்ன செய்வேன், என்ன செய்வேன் என் மனதாழம் வரை வேரூன்றிய அவள்! அவளின் கற்பனைகள்! என்னை நிலைகுலைய செய்த அத்தருணம் என்னவென்பேன், ஏதுரைப்பேன்..., அதுவரை குளிர்ச்சியூட்டிய கற்பனைகள் சுட்டெரிக்கும் வெப்பமாக மாறியது என்னுள்...!!

அவளை மறக்க மனமில்லை...! அவளை மணக்கவும் மனமில்லை...! வாழ்க்கை இப்போது கேள்வியாக என்முன் எள்ளி நகையாடுவதைப் போன்ற காட்சி...!! ஆம், நான் வாழ்க்கையை வெல்ல முடிவெடுக்கிறேன் என் காதல் என்னோடு மட்டுமே அது இனி என் நினைவுகளோடு மட்டுமே என்று என் அறைக்குள் என்னை நானே பூட்டிக்கொள்கிறேன்! விடியல் இனி இல்லை என்னும் உறுதியுடன்...!!"

என் இனிய முகநூலே என்னை ஏன் ஈர்த்தாய்...? ஈர்த்து என்னை ஏன் ஏமாற்றத்துள் அடைத்தாய்...? அடைத்து என் பலகீனத்தோடு ஏன் விளையாடினாய்...???

இவன் பாவத்தில் "முகநூலே" உனக்கும் தான் பங்குண்டு...!! விடை பெறுகிறேன். இனி நீ வேண்டாம் என்னும் முடிவுடனே ...!!!

# பாரதியும் இஸ்லாமும்

## மாலன்



“மாரியம்மனிலிருந்து மகாவிஷ்ணு வரை எல்லாக் கடவுள்கள் மீதும் பாடல்கள் எழுதுகிறார். வேதத்தைப் புகழ்கிறார். உபநிஷதங்களின் அடிப்படையில் புதுக் கவிதை படைக்கிறார். கீதையை மொழி பெயர்க்கிறார். ஒருவேளை பாரதியார் என்னைப் போல இந்துத்வா ஆளோ? இஸ்லாம் பற்றி என்ன சொல்கிறார் ‘உங்க’ பாரதியார்?” என்று வம்பளக்க வந்தார் என் பக்கத்து வீட்டுக்காரர். ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நேரம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போரடிக்கத் துவங்கியிருக்க வேண்டும். வம்புக்கு அலையும் அவர் என் வாயைக் கிளற வந்திருந்தார்.

“சொல்கிறேன், சொல்கிறேன். ஆனால் சொன்னால், அதை உம்மால் தாங்க முடியுமா என்றுதான் எனக்குக் கவலை”

“அப்படி என்ன ஐயா அதிர்ச்சி கொடுக்கப்போகிறீர்?”

“சொல்லட்டுமா? சொல்வதைக் கேட்டு விட்டு, என்னைத் திட்டினால் கூட பரவாயில்லை. பாரதியைத் திட்டினால் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டேன்”

“சும்மா பூச்சி காட்டாதீரும். சொல்லும் அதையும்தான் கேட்போம்”

“நீங்கள் தினமும் பூஜை செய்து, விழுந்து கும்பிடுகிறீர்களே, அந்தக்

கடவுள், அல்லாதான் என்கிறார்" என்றேன். என் இந்து நண்பர் முகத்தை சுருக்கினார். கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "என்ன சொன்னீர் மறுபடி சொல்லும்" என்றார்.

"பிரம்மம், பிரம்மம் என்று நீங்கள், அதாவது இந்துக்கள், சொல்கிறீர்களே அந்த பிரம்மம் அல்லா என்கிறார் பாரதியார்."

"நிஜமாவா? இல்லை நீர் கயிறு திரிக்கிறீரா?"

நான் என் மேஜை மீதிருந்த தராசு என்ற புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். அது பாரதியார் எழுதிய நூல்களில் ஒன்று:

நேற்று பட்டணத்திலிருந்து ஒரு சாமியார் நம்ம கடைக்கு வந்திருந்தார். அவர் சொன்னார்: ஹிந்துக்களுடைய வேதம் மிகவும் பழமையானது. அதிலும் நம்ம குரானைப் போல அல்லாவைத்தான் புகழ்ந்து பேசுகிறது. ஆனால் அல்லா என்கிறதற்கு அவர்களுடைய பாஷையிலே ப்ரஹ்ம என்கிறார்கள். அதில் ரிஷிகள் என்று பாடினவர்கள் அல்லாவினுடைய உண்மையை அறிந்தவர்கள் "

பக்கத்து வீட்டுக்காரர் புத்தகத்தை வாங்கிப்பார்த்தார். "இது பாரதியாரின் ஒரு பாத்திரத்தின் கூற்று. இதை எப்படி பாரதியின் கூற்றாக எடுத்துக் கொள்ள முடியும்?" என்று கேள்வி போட்டார். என்னை மடக்கி விட்டதாக அவருக்கு ஒரு பூரிப்பு.

"சரி, உமது திருப்திக்கு அப்படியே வைத்துக் கொள்ளும். ஆனால், அவர் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன் எழுதிய முகம்மதிய ஸ்திரீகளின் நிலமை என்ற கட்டுரையில், 'பரமாத்மாவான அல்லாஹுத்ததாலா அருள் புரிவானாக' என்று எழுதியிருக்கிறார். அது மட்டுமல்ல, இன்னொரு இடத்தில் இந்தியாவில் உள்ள இந்துக்கள் அக்பரை பூஜிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே அதற்கு என்ன சொல்கிறீர்? "

"இது என்ன புதுக் கதை?"

"இது கதை அல்ல. கதை போன்ற நடையில் எழுதப்பட்ட கட்டுரைகளில் சொல்லப்படுவதையே பாத்திரத்தின் கூற்று என்று தள்ளிவிடுகிற ஆள் நீங்கள். அதனால் பாரதியாரின் கட்டுரை ஒன்றிலிருந்து வாசித்துக் காட்டுகிறேன். அதை நீர் அவருடைய கூற்று அல்ல என்று மறுக்க முடியாது."

"படியுமேன். கேட்போம்"

"நமது நாட்டில் தோன்றி நமது நன்மைக்குப் பாடுபட்ட மகான்களை எல்லோரும் ஒன்று சேர்ந்து பூஜிப்பதே நமது கடமை. இதை நாமெல்லோரும் நமது முகமதிய சகோதரர்களுக்குக் காரியத்தில் காட்ட, அக்பர் போன்ற முகமதிய மகான்களின் உற்சவத்தைக் கொண்டாட வேண்டும்"

"மதங்களிடையே சமரசம் நிலவ வேண்டும் என்ற கருத்தில் இதை சொல்லியிருப்பார். அக்பரை அவர் குறிப்பிட்டிருப்பதே அதற்குச் சான்று. அவர் இந்துக்களோடு நட்புப் பாரட்டியவர் அல்லவா?"

"'முகமதிய சாஸ்திரங்களைப் படித்தால் இந்துக்களுக்கு அறிவு விசாலப்படும்' என்கிறார் பாரதியார். அதையாவது நம்புவீரா?"

"நீர் சொல்வதைப் பார்த்தால் கைவசம் ஆதாரம் வைத்திருக்கிறீர் என்று

நினைக்கிறேன். எங்கே எடுத்து விடும் பார்ப்போம்"

நான் படித்துக் காட்டினேன்: "... எல்லா வித்தைகளும் கலந்தால்தான் தேசத்தினுடைய ஞானம் பரிமளிக்கும். கலந்தால் பொது இன்பம். ஒன்றை ஒன்று கடித்தால் இரண்டுக்கும் நாசம் முகமதிய சாஸ்திரங்களைக் கற்றுக் கொண்டால் ஹிந்துக்களுக்கு அறிவு விசாலப்படும்."

"அதையெல்லாம் பாரதியார் படித்திருக்கிறாரா?"

"படித்திருக்கிறார் என்பது மட்டுமல்ல. அவற்றைப் பற்றி சரளமாக, தெளிவாகப் பேசுகிறார். மதங்கள் பற்றிய கட்டுரைகளில் மட்டும் அல்ல, அரசியல் பேசும் போதல்ல, பொது விஷயங்கள் பேசும் போது கூட அவற்றைக் குறிப்பிடுகிறார். நம்பிக்கையே காமதேனு என்ற தலைப்பில் அவர் எழுதியிருப்பதைப் படியுங்கள். முகமது நபியின் வாழ்க்கை சரித்திரத்தை இத்தனை சுருக்கமாக தெளிவாக இஸ்லாமியர் அல்லாத இன்னொருவர் எழுத முடியுமா என்று வியந்து போவீர்:

"பழைய பொய்ச் சிலைகளின் வணக்கத்தை ஒழித்து எங்கும் வியாபித்து நிற்கும் பிரம்மத்தையே தொழ வேண்டும் என்று முகமது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஒரு புதிய மதம் உண்டாக்கினார் என்ற கோபத்தால், குரைஷி கூட்டத்தார் அவருடைய சிஷ்யர்களைப் பயமுறுத்தியும், கொலை செய்தும் அடக்கிவிட்டு நபியையும் கொல்ல வேண்டுமென்ற சதி செய்து கொண்டிருக்கையிலே அந்த மகான் மெக்கா நகரத்திலிருந்து தப்பி மதீனா நகரத்திற்குச் செல்லும் போது, பின்னே அவரைப் பிடிக்கும் பொருட்டாகக் குரைஷிகள் குதிரைப்படைத் துரத்திக் கொண்டு வந்தது. நபியானவர் தம்மோடு வந்த ஒரே சிஷ்யருடன், ஹீராக் குகையில் ஒளிந்திருந்தார். துரத்தி வரும் குதிரைகளின் காலடி சமீபமாகக் கேட்டது. சிஷ்யன் பயந்து போய், "இனி என்ன செய்வது?" என்று தயங்கினான். அப்போது நபி, "அப்பா, நான் அல்லாவின் தர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டாக வந்திருக்கிறேன். என் காரியம் நிறைவேறும் வரை எனக்கு மரணம் இல்லை. "என்று சொல்லி அபயதானம் செய்தார். ஆபத்து வரவில்லை. குதிரைப்படையோர் இடம் தெரியாமல், ஏமாறித் திரும்பினார்கள். முகமது நபி பின்னிட்டுக் காலானுகூலம் பெற்று அந்த ராஜ்யத்துக்கெல்லாம் தானே ராஜேஸ்வரராய், தமது தரிசனத்தை என்றும் அழியாமல் நிலை நிறுத்திச் சென்றார். நம்பிக்கையே காமதேனு. அது கேட்டவரமெல்லாம் தரும்"

"கட்டுரைகளில் ஆங்காங்கே இஸ்லாம் பற்றிக் குறிப்பிட்டுள்ள பாரதி, கவிதைகளிலோ, கதைகளிலோ இஸ்லாமியர்கள் பற்றி எழுதியிருக்கிறாரா?"

பாரதியினுடைய முதல் சிறுகதையும், கடைசி சிறுகதையும் இஸ்லாமியர் களைப் பற்றியதாகவே அமைந்தது ஒரு தற்செயலான ஒற்றுமை. அவர் ஆசிரியராக இருந்த சக்ரவர்த்தினி என்ற பெண்கள் முன்னேற்றத்திற்கான இதழில் 1905 ம் ஆண்டு நவம்பர் மாதம் அவரது முதல் கதை வெளியாயிற்று. துளசிபாயீ என்ற அந்தக் கதை உடன் கட்டை ஏற நிர்பந்திக்கப்பட்ட ஒரு ராஜபுத்திரப் பெண்ணை அப்சல்கான் என்ற முகமதிய இளைஞன் காப்பாற்றிக் காதலித்து மணம் செய்து கொள்வதைச் சொல்லும் கதை. இந்தக்

கதை பிரசுரமாகிய காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் ஒரே மதத்திற்குள், ஒரே ஜாதிக்குள் காதல் என்பதே ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பாரதியாரோ, முரண்பட்டதாகக் கருதப்பட்ட இரு மதத்தைச் சேர்ந்தவர்கள் காதலிப்பது, ஒரு இந்து விதவையை இஸ்லாமிய இளைஞன் ஏற்று வாழ்வளிப்பது, உடன்கட்டை என்ற வழக்கத்தைக் கண்டிப்பது, ராஜபுத்ர வீரர்களோடு நடக்கும் சிறு சண்டையில் இந்து இளைஞன் ஒருவனின் தலை கொய்யப்படுவது என்று கதையை எழுதிக் கொண்டு போகிறார். அந்தக் காலகட்டத்தில் அது ஒரு புரட்சிகரமான கதையாகத்தான் இருந்திருக்க முடியும். இஸ்லாமியர்கள் மீதுள்ள அன்பினாலும், உடன்கட்டை போன்ற பெண்ணடிமை வழக்கங்கள் மீதிருந்த வெறுப்பினாலும் இந்தக் கதையை அவர் எழுதியிருக்க வேண்டும்.

அவரது கடைசிக் கதை இரயில்வே ஸ்தானம். அவர் காலமாவதற்கு சில மாதங்களுக்கு முன் எழுதிய கதை. சொத்துக்காகமுன்றுபெண்களைமணந்த இஸ்லாமியர் ஒருவர் படும்பாட்டைக் கதை விவரிக்கிறது. அந்தக் கதையும் ஒரு சர்ச்சைக்குள்ளானது. அந்தக் கதையில் இஸ்லாமியர் ஒருவர், சகோதரிகள் மூவரை மணந்து கொள்வதாக பாரதி எழுதியிருப்பார். கதை பிரசுரமான பிறகு ஒரு இஸ்லாமிய நண்பர், மனைவி உயிருடன் இருக்கும் போது, அவளுடன் பிறந்த மற்றொருத்தியைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்பது இஸ்லாமிய சாஸ்திரங்களின் கொள்கை என்பதை பாரதிக்கு சுட்டிக் காட்டுகிறார். தனது தவறை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளும் பாரதி, இந்துக்களிடையே இருக்கும் வழக்கம் இஸ்லாமியர்களிடமும் இருக்கும் என்றெண்ணி எழுதிவிட்டதாக ஒப்புக் கொள்கிறார்".

# என்னை மீட்டல்!

தனித்து நிறைதலில்
நான் என்பது எனதென்பதே
தற்செயலாய் கண்ட என்னை
எதுவும் பெரிதாய்
கேட்கத் தோன்றவில்லை
மொழிகள் அற்று சைகை செய்து
பின் இறுக்கம் அணைந்த முகத்தை
மெல்லத் துடைத்தேன்.
களிப்பு மிக்க என் முகம்
அவளுக்கு பிடித்ததாய் இல்லை
விழி எறியும்
அவள் கேள்வி கணைக்கு
பதில் தந்தாலும்,
ஒரு கணம் திகைப்பு கவிழ்ந்து
விலகுகின்றன
உள்ளம் பதைக்கிறது.
நிறைதலின் வசீகரம்
ஒரு பிடி தயக்கம்
ஒரு பிடி மயக்கம்
ஆசுவாச பார்வை உடுத்தி
அபூர்வம் குழைத்து
ஆற்றுப்படுத்துகிறாள்
இம்முறை அவளாய்.
காந்தகண்கள் விழுங்கும்
அழகு கண்ணாடி எதிரினில்
இப்போது எது நான்?
எது நீ?!



**- ஆனந்தி ராமகிருஷ்ணன்**
வடலூர்.

"அவருக்கு இஸ்லாமிய நண்பர்கள் அதிகம் இருந்தார்களோ?"

"அவர் பிறந்து வளர்ந்த எட்டையபுரம், சீறாப்புராணம் பாடிய கவிஞர் உமறுப் புலவர் வாழ்ந்த ஊர். அவர் எட்டையபுரத்தின் அரசவைக் கவிஞராகவும் விளங்கியவர். அவரது கல்லறை இன்றும் அங்கு இருக்கிறது.

எட்டையபுரத்தில் கணிசமான அளவில் இஸ்லாமியர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். எனவே இளம் வயதிலேயே அவருக்கு இஸ்லாமியருடன் பழக்கம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. புதுவையில் வாழ்ந்த காலத்தில், இஸ்லாமியர் ஒருவரது தேநீர்க்கடையில் 'தாடி ஐயர்' (பாரதிக்கு இப்படியும் ஒரு பட்டப் பெயர் உண்டு) தேநீர் பருகிய காட்சியைக் கண்டு அங்கிருந்தவர்கள் பலர் அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அன்று இந்துக்களும் இஸ்லாமியரும் பொது இடங்களில் ஒன்றாக அமர்ந்து உண்ணும் வழக்கமில்லை '. ஹிந்து-முகமதியர் கூட்டு விருந்து 'என்று 1906 செப்டெம்பரில் சுதேசமித்ரன் ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறது. இரண்டு சமயத்தாரும் ஒன்று சேர்ந்து உண்பது அத்தனை அபூர்வமாக இருந்தது. அதனால் பாரதி முகமதியரின் தேநீர் கடைக்குச் சென்று தேநீர் அருந்துவது அதிர்ச்சியோடு பார்க்கப்பட்டது. புதுவையிலிருந்து வெளியேறி தனது மனைவியின் ஊரான கடையத்தில் வாழ்ந்த போது இஸ்லாமியர்களோடு நட்புப் பாராட்டிய காரணத்தால் அவர் அக்கிரகாரத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டார். ஆனால் அதற்குப் பின்னும் 1918 ம் ஆண்டு ராவண சமுத்திரம், பொட்டல், புதூர் ஆகிய ஊர்களில் இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை என்ற தலைப்பில் உரையாற்றி இருக்கிறார் ".

"இஸ்லாம் மார்க்கத்தின் பெருமைகளைத்தான் பாரதி பேசுவாரா? அதன் மீது ஏதும் விமர்சனங்கள் ஏதும் கிடையாதா?"

"இஸ்லாமியர்களிடையே உள்ள இரண்டு வழக்கங்கள் மீது பாரதிக்கு உடன்பாடில்லை. ஒன்று அவர்களிடையே உள்ள, கோஷா என்னும் பர்தா அணியும் வழக்கம். அது அவர்களுக்குப் பாதுகாப்பு என்ற வாதத்தை பாரதி ஏற்பதில்லை. கனி கண்டவன் தோலுரிக்கக் காத்திருப்பானோ? 'வண்ண முகத்திரையைக் களைந்திடென்றேன், நிந்தன் மதங் கண்டு துகிலினை வலிந்துரிந்தேன்' என்றெல்லாம் எழுதி அதன் மூலம் ஒரு பெண்ணை அடைய நினைப்பவருக்கு இந்தத் துணித்திரை பெரும் அரண் அல்ல என்று சுட்டிக்காட்டுக்கிறார்.

பலதார மணத்தை இகழ்ந்துரைப்பதற்காகவே ரயில்வே ஸ்தானம் கதை எழுதப்படுகிறது. பலதார மணம் செய்து கொள்பவர்கள் ஒரு மனைவியைத் தவிர மற்றவர்களுக்கு மணவிலக்குக் கொடுத்து, அவர்கள் மற்றவர்களை மணம் செய்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற யோசனை அந்தக் கதையில் வைக்கப்படுகிறது. இந்த யோசனையை முகமது நபியே தனது கனவில் தோன்றிச் சொன்னதாக பாரதி எழுதுகிறார் ".

"ரொம்பத் துணிச்சல்தான். அந்த துணிச்சலை இஸ்லாமியர்கள் இந்துக் கோயில்களை இடித்ததை விமர்சிக்கப் பயன்படுத்தியிருக்கலாமே?"

"அதைக் குறித்தும் அவருக்கு ஒரு கருத்து இருந்தது:" நாமும் அவர்கள் பேரில் பூர்வீகக் குற்றங்களை எடுத்துரைத்தல் தப்பிதம். அவர்களும் நம்மை உடன் பிறந்தவர்களென பாவித்து நடக்க வேண்டும் "என்று ஓரிடத்தில் எழுதுகிறார்".

வம்பு கிடைக்காத ஏமாற்றத்தோடு எழுந்து கொண்டார் நண்பர்.

"ஓ! அப்படியா! அப்ப நான் வர்ரேன். உங்க 'பாய்' பாரதியாரிடமும் சொல்லுங்க! என்றார் நண்பர் கிண்டலாக.

நான் புன்னகைத்தேன். ■

## ஹைக்கூ

●
சூரியோதயம்
நீரில் அமைத்திருக்கும் பாதையில்
ஓடக்காரனின் பயணம்.

●
அத்தனை குருவிகளும் விற்றுத்தீர்ந்தன
மறுபடியும் சிணுங்கல்கள்
அழைப்புமணியில் கேட்கிறது.

●
முள்ளாய் குத்துகிறது
அவள் வீட்டைக் கடக்கையில்
கவிழ்ந்துக்கிடக்கிறது மீன்தொட்டி.

●
யாரையும் அழைப்பதில்லை
எதற்காக சமைக்கிறாள்
பொம்மைகளுடன் மகள்.

●
மாலையிட்ட படத்தில்
இறந்த தாத்தாவின் காலை
தொடுகிறது ஒரு பட்டாம்பூச்சி.

●
முககவசத்துடன் உலா
ஓரங்கட்டியதில் சிக்கிக்கொண்டேன்
அவளது அம்மாவிடம்.

-- தஞ்சாவூர்.சாயிராம்



## மனிதம் காப்போம்

இணைக்குறள் ஆசிரியப்பா.

உயிர்கள் இடத்தில்
அன்பு பெருகட்டும்
மண்ணில் மனங்கள்
மீண்டும் மலரட்டும்
மனிதா மனித
நேயம் மறந்தால்
நீயும் விலங்கே.

மனமே கோயில்
மனிதனே தெய்வம்
மதங்கள் அனைத்தும்
ஒன்றெனப் போற்றுவோம்
ஒளியாய்ப் பிரகாசிப்போம்
ஒற்றுமைத் தீபத்தை
ஏற்றி மகிழவே.

ரஞ்சினி சந்திரமோகன்

## தத்துவம்

குடையினால் ஒருபோதும் மழையை நிறுத்தி வைக்க முடிவதில்லை. ஆனால், அக் குடை மழையின் போது நம்மை நனைய விடாமல், கம்பீரமாக நிற்க வைக்கத் தவறுவதுமில்லை.

அதுபோல் தான் கடவுள் நம்பிக்கை யும். அது சிலநேரங்களில் எமக்கு வெற்றியைத் தருவதில்லை. ஆனால், வாழ்வின் மிகப் பெரிய காத்திருப்புகளையும் சவால்களையும் எதிர்கொள்ள எமக்கு சக்தியைத் தராமல் இருப்பதுமில்லை.

துயரமான நேரங்களில் நாம் சாய்ந்து கொள்ள ஒரு தோள் கிடைப்பது போல், ஒருசுமை தாங்கியாய் எமைத் தாங்கிப் பிடிக்கத் தவறுவதுமில்லை.

**சஞ்சய்**
( Sanjjaiy Gen Vkt b)

# கிளியோபாட்ரா



பேரழகியென கருதப்பட்ட கிளியோபாட்ரா:

எகிப்தை ஆண்ட பன்னிரண்டாம் தொலமிக்கு கிளியோபாட்ரா என்ற பெண்ணும், பதின்மூன்றாம் தொலமி, பதினான்காம் தொலமி ஆகிய மகன்களும் இருந்தனர். கிளியோபாட்ராவின் தாய் பெயர் இஸிஸ் எனக் கூறப்படுகிறது. பன்னிரண்டாம் தொலமியின் இறப்பிற்கு பின்பு பண்டைய எகிப்தின் முறைப்படி பெண் முடிசூட இயலாது. எனவே கிளியோபாட்ரா தனது சகோதரர்களை திருமணம் செய்துகொண்டார்.

அவர்களில் மூத்தவர் இவர் என்பதால் எகிப்தின் அரசியாக முடி சூட்டிக் கொண்டார். அப்பொழுது கிளியோபாட்ராவிற்கு பதினாறு வயதென்றும், அவரது சகோதரருக்கு 10 வயது எனத் தெரிகிறது. இவர் தனது தந்தை ஆட்சியிலிருந்த பொழுதே, அதிகாரத்தினைபகிர்ந்துகொண்டதாகவும் தெரிகிறது. அமைச்சர்களும், வணிகர்களும் தங்களுடைய எண்ணத்தினை நிறைவேற்றிட தொலமியை உபயோகித்து கொண்டனர். இதனால் கிளியோபாட்ராவின் அரசு பறிபோனதுடன், எகிப்தினை விட்டு விரட்டப்பட்டாள்.

சிரியாவிற்கு சென்றவள் ஜூலியஸ் சீசர் எனும் வீரன் எகிப்தை போர் செய்து வெல்ல வந்திருப்பதை அறிந்தாள். அதனால் சீசருடன் இணைந்து எகிப்தினை வெல்ல திட்டமிட்டாள். சீசருக்கும் கிளியோபாட்டராவின் கணவனுக்கும் (சகோதரர்) நடந்த சண்டையில் சீசர் கணவனை கொன்றுவிடுகிறார். கிளியோபாட்ராவின் அழகில் மயங்கிய சீசர் அவளை திருமணம் செய்துகொள்கிறார்.

இத்தம்பதிகளுக்கு பிறந்தவர் சிசேரியன் எனக் கூறப்படுகிறது. நெடுநாள் கழித்து ரோமாபுரிக்கு சென்ற சீசர் தனது நண்பன் புருட்ஸ் என்பவரால் கொலை செய்யப்பட்டார். அதன்பின் ரோமில் சீசரின் வாரிசுகளுக்கும், தளபதிகளுக்கும் பதவி சண்டை நடைபெற்றது. கணவர் துணையின்றி இருந்த கிளியோபாட்ரா சீசரின் படைத்தளபதியான ஆண்டனி என்பவரை சந்தித்தாள்.

அவர் கிளியோபாட்ராவின் அழகில் மயங்கி திருமணம் செய்து கொண்டார். அடுத்து தனது இரண்டு சகோதரிகளையும், மீதமிருந்த சகோதரனையும் கிளியோபட்ராவே கொன்றதாக கூறப்படுகிறது. இதனால் வாரிசு சண்டை என்ற பேச்சுக்கே இடமின்றி போனது. ஆண்டனி- கிளியோபட்ராவிற்கு இரண்டாம் கிளியோபாட்ரா செலீன், அலெக்சாண்டர் ஹெலியோஸ் என இரட்டையர்கள் பிறந்தார்கள்.

அதன்பின் தொலமி பிலடெல்பஸ் என்பவரும் பிறந்தார். சீசரின் வாரிசான ஆக்டோவியஸ் சீசர் கிளியோபட்ராவை எதிர்த்தார். எகிப்தின் ஆட்சிக்காக ஆண்டனியுடன் ஆக்டோவியஸ் சண்டை மூண்டது. இதில் ஆண்டனி கொலைசெய்யப்பட்டார். ஆண்டனியின் மரணத்தினை ஏற்றுக்கொள்ள இயலாத கிளியோபட்ரா, தன்னை மகாராணி போல அலங்கரித்துக் கொண்டு விஷப் பாம்புகளை தீண்டும்படி செய்து உயிர் துறந்தாள்.

கிளியோபாட்ராவின் மரணத்தினை வரலாற்று ஆசிரியர்கள் சிலர் வேறுவிதமாக கூறுகிறார்கள். கிளியோபாட்ரா உடலழகு மீது மிகுந்த கவனம் செலுத்தியவர் என்பதால், பாம்பின் விஷம் தீண்டி இறந்ததால் முகம் விகாரமடையும் என்ற காரணத்திற்காக அவ்வாறு செய்திருக்க மாட்டார் என்கிறார்கள். கிளியோபாட்ரா பண்டைய எகிப்தில் வழக்கதிலிருந்த கொடிய தாவர விஷத்தினை அருந்தியே இறந்தார் என்கிறார் செபர் எனும் வரலாற்று அறிஞர். பண்டைய பாடலாசிரியர்களும் இதையே பாடல்களில் பாடியுள்ளார்கள் என்ற போதும், கிளியோபட்ரா பாம்பு தீண்டி இறந்தார் என்பதையே பல்வேறு ஓவியங்கள் விளக்குகின்றன.

கிளியோபாட்ராவை பேரறிவு உடையவர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இவர், வானியல், ஜோதிடம் முதலிய பல கலைகளில் சிறந்து விளங்கியதாகவும், தானே ஏழுவகையான வாசனை திரவியங்களை தயாரித்ததாகவும் கருத்துண்டு. ஏழு மொழிகளை பேசவும், எழுதவும், படிக்கவும் கற்றிருந்ததாகவும் கூறப்படுகிறது.

எகிப்தினை ரோமானியர்களிடமிருந்து காப்பாற்ற அவள் தனது வாழ்வை தியாகம் செய்தவள் என்ற கருத்தும் காணப்படுகிறது. தினம் பாலில் குளிப்பவள், கண்களில் பல வண்ண மைகளால் அலங்காரம் செய்துகொள்வாள், முத்துக்களை வினிகரில் கரைத்து அருந்துவாள் என்ற கருத்தும் உண்டு.

■

# வாழ்க்கை

நம் வாழ்க்கையில்
எவரும் எந்த உறவும்
நிரந்தம் கிடையாது
அன்பை வற்புறுத்தி
கொடுக்கும் போது
வலுவிழந்து போகும்
தகுதி உடையவரிடம்
அன்பை காட்டுங்கள்
மீண்டும் இரண்டு
மடங்காக கிடைக்கும்
காலம் எல்லோரையும்
மாற்றும்
நம் வாழ்க்கையும்
மாற்றத்தை அடையும்
கடந்து செல்வோம்
சிலரை மறந்து செல்வோம்

**ஷாருலதா பாலகிருஷ்ணன்**




பாவேந்தல் பாலமுனை பாறூக் இலக்கியப் பணியில் பொன்விழாக் காணுகின்றார். தமிழ்நெஞ்சத்தின் ஆசிரியர் குழு உறுப்பினர். இலங்கை இந்திய கலை உறவுப் பாலமாக இருப்பவர்.இலங்கையில் கலாபூஷண விருது, அரச சாஹித்ய மண்டல விருது,கொடகே சாஹித்ய விருது, கிழக்கு மாகாண வித்தகர் விருது யாழ் இலக்கியப் பேரவை சான்று உட்படப் பல்வேறு விருதுகளையும் சான்றுகளையும் பெற்றவர்.

பொன்விழாக்காணும் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் பொன்விழா காலத்தில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் சில வழிதடங்கல் எனும் தலைப்பில் செ. யோகராஜா சிற்ப்பாக எழுதியுள்ளார்கள்.

படிப்பதற்கு
https://tamilnenjam;com /?p=6800

# இயலாமையின் ஒளி

## ஜீவா, கோவை

இதோ
இந்த பொழுதுதான்
உன்னை அழைத்து
இசை மீட்ட சொன்னது...

நான் பாத்துக்கொண்டே
இருக்கும் சமயத்தில்தான்
நமக்கான இருளும்
இசைந்து வந்தது...

வழியெங்கும் விழிபதித்து
உன் வருகைக்காய்
என்னுடனே காத்திருந்தது
இருளும் கைகோர்த்தபடியே...

விழிமீன்கள் நீர்வற்றி
கருவாடாய் போனபின்பு
உன்வருகை அவ்விரவின்
சாயலின் தோழனானது...

இருளுக்கான அப்பொழுது
எனைநோக்கி ஒளிவீச
இயலாமையின் கரங்களை
இறுக்கமாய் பிடித்துக்கொண்டேன்...

*மூவருமே பேச்சற்று
ஏமாற்றத்தை ஆடையாக்கி
விழிநோக்க நாணப்பட்டு
தரைமீது ஒளிபதித்தோம்...

இருளும் இயலாமையும்
மனிதத்தை சுமந்ததினால்
தனிமையிலே யெனைவிட்டு
தயக்கத்துடன் நகர்ந்தது...

யாருமற்ற இப்போது
உனக்கான தேநீரின்
ஆவியோடு அளாவுகிறேன்
என் மரணத்தை வெல்வாயா???!!!

* மூவருமே

நான்
இருள்
இயலாமை

# வாசகர் கடிதங்கள்

இதழ் வாசிக்க சிறப்பாக உள்ளது. தொடர்ந்து இதழ் வலம் வர வாழ்த்துகள். தங்களின் இலக்கியப் பணி சிறக்க நெஞ்சார்ந்த பாராட்டுகள்.
வரும் இதழுக்கு கவிதைகள் மின்னஞ்சல் செய்திருக்கிறேன். பயன் படுத்திக் கொள்ளவும்.
பாசங்களுடன்...

**பாரியன்பன் நாகராஜன்**

முத்தமிழ் கலசம் எனும் அழகிய பெயரைச் சுமந்தபடி, இணையவானில் தன் வெள்ளோட்டத்தை ஆரம்பித்த சஞ்சிகைக்கு என் வாழ்த்துகள்! அழகிய வடிவமைப்பும், உள்ளடக்கப்பட்ட ஆக்கங்களும் சிறப்பு சேர்த்தன. இனிவரும் காலங்களில் எனது ஆக்கங்களும் இடம்பெறுமென காத்திருக்கிறேன்.

**நாராயணி ராம்-பருத்தித்துறை**

முதலாவது இதழே சிறப்பு. அதிலும் கடைசி பக்கத்தில் இடம்பெற்ற கவிதை அருமை. கடைசி நான்கு வரிகளுமே கவிதைக்கு அழகு சேர்த்தன. எழுதிய கவிஞருக்கு எனது பாராட்டுகள், அழகு மற்றும், மருத்துவக்குறிப்புகளும் இடம்பெற்றால் பலருக்கு பயனுள்ளதாக அமையும்.
மேலும்,தொடர்கதைகளும் தந்தால் வாசகர் மத்தியில் நல்ல வரவேற்பு பெறும். நன்றி!

**ஒனிஸா - மாவனல்லை**

வாழ்தல் இனிது கட்டுரை, வாழ்வின் முன்னேற்றத்துக்கு பல அறிவுரைகளை வழங்கிச்சென்றது. கவிதைகளும் சிறப்பு தான், நன்றி

**சுதா சந்திரமூர்த்தி - உடுமலை**

முதலாவது இதழ் படித்தேன். அதில் இடம்பெற்ற ஓரிரண்டு கவிதைகள் தவிர்த்து மற்ற அனைத்துமே மிக அருமை! தன் முதல் பயணத்தை அட்டகாசமாக ஆரம்பித்திருக்கும் முத்தமிழ் கலசம் இன்னும் பலநூறு இதழ்கள் காண வாழ்த்துகள்!

**கவிமணி ஆதிசங்கரனார் - திருநெல்வேலி**

அழகிய அம்சங்களுடன் ஆரவாரமாய் ஆரம்பித்துள்ளீர்கள். பலதரப்பட்டவர்களின் பேட்டிகளையும் சேர்த்தால் மேலும் சிறப்புறுமே! ஒவ்வொரு கவிதைகளும் சிறப்பாகவே அமைந்திருந்தன. அதிலும் குறிப்பாக தமிழின் சிறப்புக் கூறும் கவிதைகள் பிரமாதம்! தொடரட்டும் இப்பணி!

**காத்தான்குடி முஹம்மது ரமீஸ்**

மற்ற இதழ்களைப் போலன்றி, சற்று வித்தியாசமாக இருந்தால் இன்னும் பொலிவு பெறும் என்பது என் கருத்து. இலங்கையின் எழில் கொஞ்சும் இடங்களைப் பற்றி தெரிந்து கொள்ள ஆர்வத்துடன் காத்திருக்கிறேன். அச்சுப் பிரதி எப்போது வெளிவரும்?

**கார்த்திக் குமார் நுரைச்சோலை**

வாசகர் கடிதங்கள்

# தூது செல்வாய் சிறகடிக்கும் புள்ளினமே

உலகெங்கும் பறக்கும் சுதந்திரப் புள்ளினமே
அலகில் கொறிக்க நெல்மணிகள் தருகிறேன்
நிலத்தின் மேலும் நீரின் மேலும் பறக்கிறாய்
இலக்கோடு பறக்கும் நீ தூது போவாயா எனக்கு

நல்லூதியம் பெறவே நாடுவிட்டு நாடு சென்றார்
வெல்லும் திறன் கொண்ட என் காதல் கணவர்
சொல்லும் செயலும் மாறாத பண்பாளர் அவர்
கொல்லும் உயிர்க்கொல்லி பரவும் இத்தாலியில்

நலம்தான் என்றாலும் நீ தூது சென்று வருவாயா
பலம் பெறவே கேட்கின்றேன் பாசப் புள்ளினமே
உலகே உயிர்க்கொல்லி அச்சத்தில் துடிப்பதாலே
பல நினைவுகளும் என்னைப் பந்தாடுகின்றனவே

பறவைப் பார்வையில் பார் முழுதும் தெரியுமே
உறவுகளாய் நினைந்து உலகைச் சுற்றிப் பார்
பிற உயிர்களிடமிருந்து மூன்றடி தள்ளியே இரு
திறவுகோல் எண் தருகிறேன் என்னவரைப் பார்

வீட்டிலிருந்து தான் பணி புரிகிறார் என்றாலும்
நாட்டிலுள்ள நிலைமைகளை எடுத்துரைத்திடு நீ
வாட்டுகிறது தனிமை தேற்ற ஆளில்லை எனச் சொல்
நீட்டு முகக் கவசத்தையும் கையுறையையும் அவரிடம்



தீர்வு கிடைத்ததும் ஈட்டியது போதும் திரும்பிடுக என
ஆர்வமுடன் சொல்லி என் தனிமை போக்க வரச்சொல்
சேர்ந்து வாழ்வதே மகிழ்ச்சி பிரிந்த வளம் வேண்டாமே
சோர்ந்து போகாமல் அவரை வரச்சொல்லி தூது போ

**கவிஞர் ராம்க்ருஷ்**